# கிறிஸ்தவம்

## தரம் 7

### ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி



சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவம்

# தரம் - 07

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

2008 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது

சமயக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவம்

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

© தேசிய கல்வி நிறுவகம்

முதற் பதிப்பு - 2008

மீள்பதிப்பு - 2009

**ISBN - 978-955-654-150-2**

சமயக் கல்வித்துறை

மொழிகள், மானிடவியல், சமூகவிஞ்ஞானபீடம்

தேசிய கல்வி நிறுவகம்

அனுசரணை : ஆசிய அபிவிருத்தி வங்கி

இடைநிலைக்கல்வி நவீனத்துவ செயற்றிட்டம்

வெளியீடு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக

ப்ரின்ட்கெயார் பெகேஜிங் (பிரைவேட்) லிமிட்டடினால் அச்சிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையின் கலைத் திட்டத் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்த கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில், குறித்த பாடத்துடன் தொடர்பான வியடத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் வழங்கப்பட்டு அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிரந்தது. இந்நடைமுறை காரணமாக ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வப்பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல, இனங்காணப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அணுகுமுறை மூலம் அதிக விடயங்களைக் கற்று அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள், இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன் அதில் விசேட கவனமும் செலுத்த வேண்டும். இந்நூலில் புதியதொரு கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்தல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடல் அவதானித்தல், தகவல் அறிந்தோரை சந்தித்து செய்தி சேகரித்தல், தமது உடன் மாணவரிமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், (இயலுமெனில்) இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றல் கலாச்சாரம் ஒன்றைக் காண முடிகின்றது.

இதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடப் புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ளலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்காகவும், முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வது ஆசிரியர்களின் பணியாகும், இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் பகுத்தறிவு மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு, மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சம்பளையும் தெரிந்தவர்ளாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றல் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் பரிந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாள்வதற்கும், இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராகச் செயற்பட்டு, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர் சில சந்தர்பங்களில் எதிர் கொள்ளுகின்ற கடினப்பாடு/ இடர்பாடுகளை நீங்கள் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள உடன் மாணவருக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்படும்போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்த கற்றலுக்கு உதவியாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை விரிவுபடுத்துவதற்கான கருவியானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்த கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை, மாணவர் மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் - கற்பித்தலை விரிவுபடுத்தம் கருவிகளைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்கலாம். அதற்குப் பொருத்தமானவாறு ஆசிரியர் வகிபாகமும், வகுப்பறையும், புதிய கற்றல் கலாச்சாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுவியல் சமூக விஞ்ஞானம் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பளைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்டும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் வுசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவலற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிக்ட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்ககூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதம் என உறுதியாக நம்புகின்றேன்.

**டபிள்யு.எம்.என்.ஜே. புஸ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
இசுருபாய
பத்தரமுல்ல
12.11.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும்**

| | | |
|---|---|---|
| **பணிப்பு** | : | பேராசிரியர் ஜெ.டபிள்யூ விக்கிரமசிங்க<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>திரு விமல் சியம்பலாகொட<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மாணிடவியல், சமூக விஞ்ஞானப் பிரிவு<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **மேற்பார்வை** | : | கலாநிதி. மாவுல்கொட சுமணரத்ன தேரர்<br>பணிப்பாளர்<br>சமய கல்வித் துறை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **ஆலோசனை** | : | கலாநிதி. அருட்பணி. ஜயசிரி. ரீ. பீரிஸ் |
| **இணைப்பாளர்** | : | கலாநிதி. அருட்பணி.ஜயலத் பலகல்ல |
| **ஆக்கியோர்** | : | திருமதி ஹசினி பர்னாந்து மென்டிஸ்<br>செல்வி. டபிள்யூ. என். மதாரா பர்னாந்து<br>அருட்பணி. செ.டே.ப செல்வன்<br>திருமதி. சுமுதினி பர்னாந்து<br>திருமதி. குளோரி ஹெக்கியா |
| **அட்டையும் படங்களும்** | : | செல்வி.டிபிள்யூ.என். மதாரா பர்னாந்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

## பகுதி - 1


| | |
|---|---|
| முகவுரை | i |
| முன்னுரை | iii |
| ஆலோசனைக்குழுவும் ஆக்கியோர் குழுவும் | v |

**பகுதி 1**

| | | | |
|---|---|---|---|
| 7.1.0 | : | பாடத்திட்டம் | 1 |
| 7.1.1 | : | அறிமுகம் | 2 |
| 7.1.2 | : | பாடத்திட்டத்தின் நோக்கம் | 3 |
| 7.1.3 | : | வகுப்புக்குரிய தேர்ச்சி | 4 |
| 7.1.4 | : | பாடத்திட்டம் | 5 |
| 7.1.5 | : | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 8 |
| 7.1.6 | : | கணிப்பீடும் மதிப்பீடும் | |

**பகுதி – 2**

| | | | |
|---|---|---|---|
| 7.2.0 | : | பாடத்திட்டத்தின் தொடரகம் | 9 |
| 7.2.1 | : | கற்றல் கற்பித்தல் முறை விளக்கம் | 10 |
| 7.2.2 | : | தரவிருத்தி உள்ளீடுகள் | 12 |
| 7.2.3 | : | செயற்பாட்டுத் தொடரகம் | 14 |

**பகுதி – 3**

| | | | |
|---|---|---|---|
| 7.3.0 | : | கணிப்பீடும் மதிப்பீடும். | 91 |
| 7.3.1 | : | கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம் | 92 |
| 7.3.2 | : | கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள் | 93 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 1


| | | |
|---|---|---|
| 7.1.0 | : | பாடத்திட்டம் |
| 7.1.1 | : | அறிமுகம் |
| 7.1.2 | : | பாடத்திட்டத்தின் நோக்கம் |
| 7.1.3 | : | பாடத்திட்டம் |
| 7.1.4 | : | கற்றல் கற்பித்தல் முறை |
| 7.1.5 | : | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் |
| 7.1.6 | : | கணிப்பீடும் மதிப்பீடும் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.1.1. அறிமுகம்

ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் சமயத்தின் மூலம் மட்டுமே அதனை நிறைவேற்ற முடியும். எனவே சிறு வயது முதல் பிள்ளைகளுக்கு சமயத்தைப் பற்றிய சரியான விளக்கத்தினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல பிள்ளைகளின் அன்றாட வாழ்வில் சமய நெறிகளைக் கடைபிடித்துக் வாழச் செய்ய வேண்டும்.

தேர்ச்சிக்கான அடிப்படையாகக் கொண்ட புதிய கலைத் திட்டத்தின் நோக்கமானது சமய பாடத்தை அறிவுக்காக மட்டும் வாழத் தேவையான வழிகளை எடுத்துக் காட்டுவதாகும். தேர்ச்சி படுத்தும் ஏதோவொரு பழக்கமாகும். அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றை ஒருவரோடொருவர் தொடர்பு படுத்துவதால் வாழ்வில் அதனை ஒரு பழக்கமாக்கிக் கொள்ளலாம். தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையில் ஒரே கருப் பொருள் அல்லது கருப் பொருள்கள் ஒரு தொடர்பான அடிப்படையில் எளிதான முறையில் வெளியிடப்பட்ட ஏதோவொரு முதிர்ச்சி நிலையை நோக்கிச் செல்லும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள கலைத்திட்டத்தின் வழியாக இத்தேர்ச்சிகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

தரம் - 11 கல்வி கற்று முடிவடைவதோடு பெரும்பாலும் மாணவரது சமயக் கல்வியும் முடிவடைகின்றது. இதனால சமூக ஆளுமையைக் கட்டியெழுப்புவதோடு தேவைப்படின் சமூகத்தையும் மாற்றமடையச் செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.

வாழ்வின் ஒரு கட்டத்தை முடித்துக் கொண்டு இன்னுமொரு கட்டத்தை நோக்கிச் செல்லுகின்ற இவர்களிடம் விருப்பத்தை ஏற்படுத்துவதோடு, மாணவர்களது வாழ்க்கையிலே சமயத்தை வாழ்வளிப்பதற்கு இயலுமானவரை ஆசிரியராகிய உங்களது கற்பித்தல் செயற்பாட்டை முழுமையான அர்ப்பணிப்புடனும், பொறுப்புடனும் நிறைவேற்றி உங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பதே எமது ஒன்றிணைந்த எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.1.2. பாடத்திட்டத்தின் நோக்கம்

- உயிர்த்தெழுந்த கிறிஸ்துநாதரின் அழைப்பை ஏற்று அவரது உயர்ந்த பண்புகளைப் பின்பற்றி வாழுதல்.

- இலங்கைக் குடிமக்களாகவும் கிறிஸ்து நாதரைப் பின்பற்றுபவராகவும் இருந்து தமது திறமைகளையும் ஆற்றல்களையும் தேசிய அபிவிருத்திக்குச் செலுத்துவதற்குத் தேவையான மேலதிகமான ஆற்றல்களை வளர்த்தல்.

- அன்பை அடிப்படையாகக் கொண்ட சேவை மனப்பான்மையுடன் சமூகத்தை உருவாக்கு வதற்குத் தேவையான வழிவகைகளைச் செய்து கொடுத்தல்.

- இலங்கைக் கலாசாரத்தை மதித்து அக்கலாசாரத்தின் பெறுமானங்கள் மூலம் செபங்கள், தியானங்கள் என்பவற்றைச் சேர்த்துக் கொண்டு வழிபாடுகளை ஒழுங்குசெய்து அர்த்தமுள்ள வழிபாடாக நடத்துவதற்கு வழிவகுத்தல்.

- தேசிய ரீதியானதும் சமயங்களுக்கிடையிலானதுமான நட்புறவை வளர்ப்பதற்காக, நீடித்து நிலைக்கக்கூடிய மனித தொடர்புகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் இறை அருளைப் புவியில் விரிவாக்குவதற்கான பங்களிப்பிற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.

- தன்னைச் சூழவுள்ள இயற்கைச் சூழலைக் கடவுளின் கொடை எனக் கருதி அதனைப் பாதுகாத்து விருத்தி செய்வதற்கான படிமுறைகளை மேற்கொள்வதற்குத் தூண்டுதல்.

- வாழ்க்கையும் மறைக்கல்வி கற்பதும், இரண்டும் ஒரே செயல் என்பதை ஏற்றுக் கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.1.3 வகுப்புக்குரிய தேர்ச்சி

1. கடவுளின் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்கமிகு வாழ்வு வாழ்வர்.

2. இயேசுவின் குணாதிசயங்களைத் தமதாக்கிக் கொள்வர்.

3. இறையரசின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர்.

4. வேதாகமத்தை நாளாந்த வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.1.4 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாட அலகுகள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1.0 கடவளின் நம்பிக்கையின் அடிப்படையில் நல்வாழ்வு வாழ்வர். | 1.1இறையன்பு குறித்து உயிர்வாழ்வனவற்றின் சூழல் மூலம் சான்று பகர்வர் | உயிரினங்கள் வாழ்வதற்கு கான எற்ற சூழல்<br>தொடக்க நூல் 1:1-2,9-10<br>யோபு 38:24:38<br>திருப்பாடல் 65:6,9<br>திருப்பாடல் 104:14 | 01 | அவதான் அறிக்கை |
| | 1.2 இறையன்புக்கு விலங்குகளின் நற்பண்புகளை தொடருவதன் மூலம் சான்று பகர்வர் | விலங்கின உலகம்<br>தொடக்கநூல் 1:20:25<br>நீதிமொழிகள் 6:6-8<br>நீதிமொழிகள் 14:4 | 01 | குழுநிலைச் செயற்பாடுகள் |
| | 1.3 இறையன்பு குறித்து ஒளிவர்வன மூலம் சான்று பகர்வர் | ஒளிதரும் படைப்புகள்<br>தொடக்கநூல் 1:14-19<br>திருப்பாடல் 136:7:9 | 01 | ஒப்படை |
| | 1.4 இறையன்பை கடல் நீர்வளங்கள் மூலம் உணர்ந்து சான்று பகர்வர் | கடல், நீர் வளங்கள்<br>தொடக்கநூல் 1:10<br>திருப்பாடல் 104:24-26 | 01 | வெளிக்களப் பயணம் ஆக்கபூர்வச் செயற்பாடு |
| | 1.5 கடவுள் மனுக்குலத்துடன் இருக்கிறார் என்பதற்கு சான்று பகர்வர் | இறைவன் அம் மக்களோடு இருக்கிறார்<br>திருப்பாடல் 121 | 01 | சிறு கட்டுரை |
| 2.0 இயேசுவின் பண்புகளின் அடிப்படையில் வாழ்வு வாழ்வர் | 2.1 கடவுளின் வலுவூட்டலுக்கு சான்று பகர்ந்த எலியா போல இயேசுவின் பண்புகளோடு வாழ்வர். | எலியா பெலப்படுத்தப் படல்<br>1அரசர் 19:1-16 | 02 | எண்ண மாதிரியுரு |
| | 2.2 கடவுள் பாலைவனத்தில் இஸ்ரவேலரை உணவூட்டி பராமரித்தது போன்று இயேசுவின் பண்புகளால் பராமரிக்கப்படுவர். | வனாந்தரத்தில் போசிக் கப்படல்.<br>வி.பயணம் 16.4-35 | 02 | திறந்த நூல் பரீட்சை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| | 2.3 கடவுள் இஸ்ரவேலரை செங்கடல் பயணத்தின் மூலம் ஒடுக்கு முறையாட்களிடமிருந்து பாதுகாத்தது போல இயேசுவின் பண்புகளால் பாதுகாக்கப்படுவர். | செங்கடல் பிரயாணம் வி.பயணம் 14.15.31 | 02<br>02 | கட்டுரை வடிவ வினா |
| | 2.4 இயேசு அருளும் புத்துணர்வுடன் வாழ்வர். | சீடர்களுக்குப் பெலன் மாற்கு 6:45-52 | 02 | குறுகிய வசன நடைப் பரீட்சை |
| | 2.5 இயேசு அருளும் புதுநம்பிக்கையுடன் வாழ்வர். | எம்மா பயணம் | 02 | எண்ண மாதிரியுரு |
| | 2.6 இயேசு வலியுறுத்திய பகிர்தல் மூலம் புது உலகம் அமைத்து வாழ்வர். | 5000 பேருக்கு உணவளித்தல் யோவான் 6:1-13 | 02 | செயற்பாடு |
| | 2.7 தீமைக்கு சவாலிட்டு வாழ்வர் | நீரின் கொந்தளிப்பி விருந்து பாதுகாவல். லூக்கா 8:22-25 | 02 | ஆக்கபூர்வ செயற்பாடு. செவிவழிப் பரீட்சை |
| **3.0 இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்** | 3.1 ஏழைகள் கடவுளின் ஆட்சியின் வாரிசுகள் என்பதை ஏற்று வாழ்வர் | சமவெளிப் பொழிவு லூக்கா 6:20 | 03 | இரட்டைப் பதிவுக் குறிப்பேடு |
| | 3.2 அன்பு மைய வாழ்வு வாழ்வர் | அன்பு<br>லூக்கா 6:27-36<br>லூக்கா 10:25-37 | 03 | கட்டுரை வடிவ வினா |
| | 3.3 மன்னிப்பு மைய வாழ்வு வாழ்வர் | மன்னிப்பு<br>லூக்கா 23:32:34<br>மத்தேயு 18:21-35 | 03 | குழுமட்டச் செயற்பாடு |
| | 3.4 பணியாளர் தலைமைத்துவ பண்புடைய வாழ்வு வாழ்வர் | சேவைத் தலைமைத்துவம் யோவான் 13:1-20 | 03 | ஆக்கபூர்வச் செயற்பாடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| | 3.5 கைம்மாறு எதிர்பாரா பண்புடைய வாழ்வு வாழ்வர். | அத்திமரை உபசரித்தல் லூக்கா 14:7-23 மத்தேயு 10:40-42 | 03 | குறுகிய எழுத்து வடிவப் பரீட்சை |
| | 3.6 'நற்பயன் கொடுக்கும்' பண்பு மைய வாழ்வு வாழ்வர். | பலன் கொடுத்தல் லூக்கா 6:43-45 | 03 | கட்டுரை வடிவ வினா |
| | 3.7 சிறுவர்களுக்கு உரிய இடம் வழங்கும் வாழ்வை வாழ்வர். | மத்தேயு 18:1-5 மத்தேயு 19:13-15 | 03 | ஒப்படை |
| | 3.8 பெண்களுக்குரிய இடம் வழங்கும் வாழ்வை வாழ்வர். | பெண்கள் லூக்கா 10:38-42 | 03 | இரட்டைப் பதிவுக் குறிப்பேடு |
| | 3.9 'பாவிகள்' என கருதப்பட்டோருக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்வோம். | பாவிகள் லூக்கா 10:38-42 | 03 | எண்ண மாதிரியுரு |
| | 3.10. சமுகத்தில் ஒதுக்கப்பட்வர்களுக்கு உரிய இடம் வழங்கும் வாழ்வை வாழ்வர். | சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் லூக்கா 5:12-16 | 03 | செயற்றிட்டம் |
| 4.0 திருவிலியத்தின் அடிப்படையில் நாளாந்த வாழ்வை வாழ்வர் | 4.1 செல்வி மேரி ஜோன்சின் விவிலியம் வாங்கும் ஆர்வத்தால் தூண்டப்பட்டவர்களாய் நல்வாழ்வு வாழ்வர். | மேரி ஜோன்சின் முயற்சி | 02 | குறுகிய எழுத்து வடிவப் பரீட்சை |
| | 4.2 அருட்பணி தோமஸ் சார்ளசின் திருவிவிலிய பகிர்வு பணியின் ஒப்படைப்பின் மூலம் தூண்டப்பட்டவர்களாக நல்வாழ்வு வாழ்வர். | தோமஸ் சார்ல்ஸ் போதகரின் மூலம் முழு உலகிற்கும் வேதாகமப் பணி. | 02 | வெளிக்கள் சுற்றுலா செயற்றிட்டம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.1.5 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

1. பாடசாலையில் தவணை ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு முறையேனும் திருவிவிலிய வாசிப்பில் அல்லது திரு வழிபாட்டில் ஈடுபடச் செய்தல்.
2. மாணவர்களது ஆன்மீக வளர்ச்சிக்குத் திருச்சபையின் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ள உற்சாகப்படுத்துங்கள்.
3. சமய, கலாசார சங்கங்களை வகுப்பு மட்டத்தில் ஒழுங்கு செய்தல்
4. சமய கருத்துக்களை நடைமுறைப்படுத்தும் விதமாக சிரமதானம் போன்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
5. திருச்சபையின் செயற்பாடுகளில் பிள்ளைகளைப் பங்கேற்கச் செய்தல்
6. பல்வேறு சமயங்களுக்குரிய புனித தலங்களைத் தரிசிப்பதனூடாகவும் அச்சமயங்களின் பெரியார்களைச் சந்திப்பதனூடாகவும் குறித்த அம்சமயங்களுக்கு மதிப்பளிக்க வகை செய்தல்.

## 7.1.6 கணிப்பீடும் மதிப்பீடும்

கணிப்பீட்டு மதிப்பீட்டை பின்வரும் முறைகளினூடாக மேற்கொள்ளலாம்.

- எழுத்துப் பரீட்சை
- குறிப்புப் பதிவேட்டின் வாயிலாக
- ஆக்கங்கள்
- வரைபடங்கள்
- ஒப்படை
- செயற்றிட்டம்
- சுருக்கமான எழுத்துப் பரீட்சை
- அவதானித்தல்
- முறைசார்ந்த பரீட்சை
- முழுப் பரீட்சை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 11

7.2.0 பாடத்திட்டத்தின் தொடரகம்

7.2.1 கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

7.2.2 தர விருத்தி உள்ளீடுகள்

7.2.3 செயற்பாட்டுத் தொடரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.2.1. கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

இக்கற்கைநெறிக்குரிய கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில், தேடியாய் தலை அடிப்படையாகக்கொண்டு, மாணவரது தேர்ச்சிகளை உருவாக்கத்தக்க வகையில் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தேர்ச்சிசார் கல்விக்காக ஆயத்தமாகும் போது, ஆசிரியரது வகிபாகத்திலும் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பண்டைக் காலந்தொட்டு பரவலாக நடைமுறையில் இருந்த மரபு ரீதியான கடத்தல் வகிபாகம் (Transmission Role) பிற்காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் வகிபாகம் (Transaction Role) என்பன எமது வகுப்பறைகளில் தற்போதும் கூட அரசோச்சுவதைக் காண முடிகின்றது. இன்று பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளின் கற்பனைத் திறன்கள், தனிப்பட்ட திறன்கள், சமூகத்திறன்கள் போன்றவையெல்லாம் சீர்க்குலைந்துள்ள நிலையில், கற்றல் - கற்பித்தல் முறையினை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனை எவ்வாறு செய்வது என்பதையும் இனங்காணல் கடினமாகவுள்ளது.

கடத்தல் வகிபாகத்தில், தாம் கற்க வேண்டிய அனைத்தையும் அறிந்தவர் ஆசிரியரே என மாணவர் ஏற்றுக் கொள்வர். மாணவருக்கு எதுவுமே தெரியாது எனக் கருதும் ஆசிரியர் தமது அறிவை மாணவருக்கு கடத்துபவராகச் செயற்படுகின்றார். ஆசிரியரிடத்தே இருந்து மாணவருக்கு அறிவு கடத்தப்படுதல் மாத்திரம் இடம்பெறும். இவ்வகிபாகம் விரிவுரை போன்றதாகவே அமையும். இக்கற்றல் - கற்பித்தற் செயன்முறை மாணவரது சிந்தனையை - கற்பனையைத் தட்டியெழுப்புவதிலே அவர்களது ஆளிடை மற்றும் சமூகத்திறன்களை விருத்தி செய்வதிலே கணிசமான பங்களிப்பைச் செய்வதில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் நடத்தும் கலந்துரையாடல், கொடுக்கல் - வாங்கல் வகிபாகத்தின் தொடக்கமாகும். ஆசிரியருக்கும் மாணவருக்கும், பின் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றமம், அதனைத் தொடர்ந்து உருவாகும் மாணவருக்கும் மாணவருக்கும் இடையிலான இடைத்தொடர்புகளும் படிப்படியாக ஓர் *உரையாடலாக மாற்றம் பெறும். அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றுக்கும்*, எளிமையானவற்றில் இருந்து சிக்கலானவற்றுக்கும் காட்சி (தூல) நிலையில் இருந்து கருத்து நிலைக்கும் மாணவரை இட்டுச் செல்வதற்காக ஆசிரியர் தொடர்ந்து வினாக்களை விடுப்பார்.

தேர்ச்சிசார் கல்வியில் மாணவரது பணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் அந்தந்தத் தெர்ச்சியில் குறைந்தபட்சம் அண்ணளவாகவும், பாண்டித்திய மட்டத்தையேனும் அடையத்தக்க வகையில் தலையிட்டு, வளவாளராக (Resource Person) ஆசிரியர் செயற்படுவார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களையும் ஏனைய வசதிகளையும் மாணவரது இயலுமைகளையும் இயலாமைகளையும் இனங்காணல். தேவையான முன்னூட்டலும் பின்னூட்டலும் வழங்கி மாணவரது கற்றலை மேம்படுத்தல், வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் - கற்பித்தலை இட்டுச் செல்வதற்காக, பொருத்தமான உபகரணங்களைத் தயார்ப்படுத்தல் போன்றவை எல்லாம் ஆசிரியரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளாகும். மேற்போன்றவாறான பணிகளை உள்ளடக்கிய ஆசிரியர் வகிபாகமே நிலைமாற்ற வகிபாகம் (Transformation) எனப்படுகின்றது.

இதன் முதலாம் பகுதியில் பாடத்திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க செயற்பாட்டுத் தொடர் இரண்டாம் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாடும் குறைந்தபட்சம் மூன்று படிமுறைகள் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரைக் கற்றலின்பால் ஈர்ப்பதே செயற்பாட்டின் முதலாவது படிமுறையினால் தொடர்புறுத்தும் படிமுறை (Engagement Step) எனப்படுகிறது. இதன் தொடக்கத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளை வெளிக்காட்டியவாறு மாணவருடன் உரையாடுவர். இது பின்னர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படும். மேலும், செயற்பாடுகள் குறித்த கோடிகாட்டல்களும் வழங்கப்படும். இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்கள் கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் நறுக்குகளை முன்வைத்தல், காட்டி மறைக்கும் அட்டைகளைக் (Flash Cards) காட்டுதல் போன்ற தூண்டல் முறைகளைக் கையாளுதல், பிரச்சினைகள், புதிர்கள், விவகார ஆய்வு (Case Study) போன்றவற்றை முன்வைத்தல், உரையாடல் போலச் செய்தல், படம், செய்துகாட்டல் (Demonstration) போன்றவற்றை முன்வைத்தல், ஒலி நாடாக்கள், ஒலி ஒளி நாடாக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு உத்திகளை இதற்காக ஆசிரியர் பயன்படுத்தலாம். சுருக்கமாகக் கூறுவதாயின், பின்வரும் மூன்று நோக்கங்களையும் அடைவதைக் கருத்திற் கொண்டே செயற்பாட்டின் முதலாவது படிமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வகுப்பின் கவனத்தைக் கவர்தல்

தேவையான முன்னறிவை நினைவு கூர்வதற்கு மாணணவர்களுக்கு வாய்ப்பளித்தல்

செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையின்போது மாணவரை ஈடுபடுத்த எதிர்பார்க்கும் தேடியாய்வின் அடிப்படை அம்சங்களை அம் மாணவர்க்கு அறிமுகஞ் செய்தல்.

மாணவருக்கு கண்டறியும் வாய்ப்பை வழங்குவதற்காகவே செயற்பாட்டின் இரண்டாம் படிமுறை திட்டமிடப்பட்டுள்ளது. கண்டறிதலுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தற் படிவத்தை அடிப்படையாகக் கொண்டே மாணவர் கண்டறிகையில் ஈடுபடுவர். பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களைக் குழுநிலையில் கண்டறிந்து ஒத்துழைத்துக் கற்கத்தக்க வகையில் இக்கண்டறிக்கையை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். தரப்பட்டுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் குழு கலந்துரையாடலை நடத்தியவாறு மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபடுதல் இப்படிமுறையின் சிறப்பியல்பாகும். தொடர்ந்தும் இவ்வாறான குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தன்னடக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படல், ஏனையோலுக்கு உதவி புரிதல், நேர முகாமை, உயரிய தரமுடைய உற்பத்திகளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான பல தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இப்படிமுறையூடாக மாணவர்க்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கண்டறிகைக்காக மாணவரை வழிப்படுத்துகையில் மாணவர் குழுக்களின் தலைமைத்துவம் குறித்து ஆசிரியர் முடிவெடுத்தலாகாது. மாறாக, மாணவர் குழுவில் ஒருவர் தலைவராக உருவெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் ஆசிரியரின் பொறுப்பாகும். இலை மறைகாயாகக் காணப்படும் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு, தருணத்திற்கு ஏற்ப தலைமைத்துவத்தை ஏற்கும் வாய்ப்பு மாணவருக்குக் கிடைக்க இது வழிகோலும்.

செயற்பாட்டின் மூன்றாம் படிமுறையின்போது, ஒவ்வொரு குழுவுக்கும் தாம் கண்டறிந்தவற்றை அதாவர் தமது கண்டறிகையின் பெறுபேறுகளை ஏனையோரும் அறிந்துகொள்ளும் பொருட்டு, முன்வைப்புக்களை வைப்பதற்கு மாணவரைத் தூண்டுவதே இங்கு ஆசிரியரின் பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாணவருக்கும் பொறுப்புக்களை ஆற்றும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் முன்வைப்பைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துதல் பயனுடையதாகும். வழக்கமாக ஆசிரியரின் குரல் ஒலிக்கும் வகுப்பறையில் மாணவரின் குரச் ஓங்கி ஒலிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றமை, மாணவர் தாம் கண்டறிந்தவற்றுக்கு விளக்கமளித்தலுடன் (நுஒிடயயெவழைெ) தொடர்புடைய இப்படிமுறையின் சிறப்பியல்பாகும்.

திருமறை பற்றிய அறிவு வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். எனினும் திருமறை அறிவு மாத்திரம் வாழ்க்கைக்குப் பயனளிப்பதில்லை. மாறாக அவ்வறிவு வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். வகுப்பறையில் மட்டுமன்றி அதற்கு வெளியேயும் பின்பற்றப்பட வேண்டும். இதனை எவ்வாறு மேற்கொள்வது என்ற வினாவுக்கு விடை தேடினால் பல்வேறு வழிமுறைகள் மூலம் இதனை மேற்கொள்ளலாம். வகுப்பறையில் கற்கின்ற அம்சங்களும் செயன்முறைகளும் வாழ்க்கையில் நடைமுறைக்கு வர வேண்டும். அப்போது தான் திருமறை மீதான பற்று ஏற்படும்.

- திருவிருந்து வழிபாடு ஒன்றை ஏற்பாடு செய்து அதில் ஆர்வத்தோடு பங்கேற்றல்.
- வருடத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நிறைவேற்றும் வழிபாடுகளில் கலந்துகொள்ளல் (உதாரணமாக பெரிய வியாழன், பெரிய வெள்ளி, உயிர்ப்பு ஞாயிறு, நத்தார் போன்றன)
- திருச்சபையின் செயற்பாடுகளில் பங்கேற்றல்
- நோயாளி ஒருவரை தரிசிக்கச் சென்று ஆறுதற்படுத்தல்
- ஏழைப் பிள்ளைகளுக்கு உடை, உணவு, பானம், புத்தகம், பணம் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்குதல்.
- முதியோர் இல்லமொன்றுக்குச் சென்று அதனைச் சுத்தம் செய்தல்.
- முதியோருடன் பணிவாகக் கதைப்பதும், அவர்களை உபசரிப்பதும.
- வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று அங்கு இடம் பெறும் திரு வழிபாடுகளில் பங்கேற்றல்.
- செபம், தியானம், திரு வழிபாடுகளில் கலந்து கொள்ளல்.
- ஒரு செயலை ஆரம்பிக்கும் போதும் அதன் முடிவின் போதும் திரு வழிபாடு மேற்கொள்ளல்.

இவ்வாறான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதனூடாக வகுப்பறையில் கற்கின்ற அம்சங்களுக்கும் நடைமுறை திருமறை வாழ்வுக்கும் இடையில் தொடர்புண்டு என்பதை மாணவர்கள் புரிந்து கொள்கின்றனர்.

மேற்கூறப்பட்ட மாதிரிகள் தவிர்ந்த வேறு வழிமுறைகளையும் பின்பற்றுவதற்கான சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு அவகாசத்தை இப்பாடத்திட்டம் ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7.2.2 தரவிருத்தி உள்ளீடுகள்

- திருவிவிலியம் / புதிய ஏற்பாடு
- தரம் 7 பாடநூல்
- படங்கள்
  பலஸ்தீனா படம்
  உலகப் படம்
- புகைப்படங்கள்
- மனித, மிருகங்கள், படங்கள்
  ஒளியைக் குறிக்கும் படம்
  ஏழைகளைக் குறிக்கும் படம்
  மேரி ஜோன்சின் படம்
  தோமஸ் சார்ள்சின் படம்
- தினசரிப் பத்திரிகை
  ஏழ்மை பற்றிய செய்திகள்
  சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய விடயம்
  பெண்கள் துஷ்பிரயோகம் பற்றிய விடயம்
- பாடல்கள்
  கிறிஸ்தவப் பாடல்கள்
- அட்டைகள்
  திருவிவிலியப் பகுதிகள் எழுதிய அட்டைகள்
  இயேசுவின் செபம் அடங்கிய அட்டை
- இறுவெட்டு (CD)
- சிறுவர்களின் உரிமை சாசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 1.0** | : | கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் நல்வாழ்வு வாழ்வர். |
| **தேர்ச்சி மட்டம் 1.1** | : | இறையன்பு குறித்து உயிர்வாழ்வனவற்றின் சூழல் மூலம் சான்று பகர்வர் |
| **செயற்பாடு 1.1** | : | உயிர் வாழ்வனவற்றின் சூழலில் இறையன்பை புரிந்து கொண்டு சான்று பகர்வோம். |
| **நேரம்** | : | 40 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 1.1.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 1.1.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுதும் தாள்
- நிறப்பேனா
- ஒலி ஒளிப் பேழை
- உயிர்வாழ்வனவற்றை (நேரடியாக அல்லது படத்தின் மூலம்) அவதானிக்க ஏற்ற படம்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 1.1.1**

- உயிர் வாழ்வனவற்றின் சூழலை அவதானித்த மாணவர்கள் எண்ணங்களை வெளிப்படுத்த இடமளியுங்கள்
- இணைப்பு 1.1.1 உள்ள தகவற் கோவையை வாசித்து விளங்கிக் கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்
- பின்வருவனவற்றை விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

| |
|---|
| • உயிர்வாழ்வன அனைத்தையும் கடவுளே படைத்தார்.<br>• உயிரினங்கள் வாழ்வதற்கு பொருத்தமான சூழல் பூமியில் உள்ளது,<br>• உயிர்வாழ்வன கடவுளின் அன்பின் வெளிப்பாடுகள்.<br>• உயிர்வாழ்வன வாழும் சூழலை நாம் பேண வேண்டும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 1.1.1**

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 4.2.2 உள்ள செயற்பாட்டுப்படிவம், திருவிவிலியம் எழுது தாள் நிறப்பேனா, உயிர்வாழ்வானவற்றை சித்தரிக்கும் படம் வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

**படிமுறை 1.1.2**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- ஒழுக்கமற்ற சூழலை உயிரினங்கள் வாழ்வதற்கு (தொடக்கநூல் 1:1,2) பொருத்தமான சூழலாக கடவுள் மாற்றினார். (தொடக்க நூல் 1:9,10).
- உயிரினங்களின் வாழ்க்கை ஒழுங்கமைப்பில் கடவுளின் ஆற்றல் வெளிப்படுகின்றது. (யோபு 38:24-38)
- உயிர்வாழ்வன கடவுளின் அன்புக்கு சான்று பகிர்கின்றன.
- கடவுளில் நம்பிக்கை வைத்து அவரது உயிரினங்கள் வாழும் சூழலை நாம் பொறுப்போடு கவனிக்க வேண்டும். (திருப்பாடல்கள் 65:6-9, 104:14).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்

1. உயிர்வாழ்வன சிலவற்றை பெயரிடுவர்.
2. உயிர்வாழ்வனவற்றின் சூழலை அவதானித்து அதனை பாதுகாக்க முன்வருவர்
3. உயிர்வாழ்வன கடவுளின் அன்புக்கும் ஆற்றலுக்கும் சான்று பகிர்கின்றன என தீர்மானித்து எழுதுவர்
4. குழப்பங்கள் நிறைந்த இன்றைய உலகை ஒழுங்குமிக்கதாக மாற்ற என்ன செய்யலாம் என கலந்துரையாடி மற்றவர்களுக்கு கூறுவர்

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- ஒவ்வொரு குழுவில் உள்ளவர்களும் தத்தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்

## தகவல் கோவை — இணைப்பு 1.1.1

ஒழுங்கற்ற சிக்கல்கள் நிறைந்த சூழலை உயிரினங்கள் வாழ்வதற்கு பொருத்தமான சூழலாக கடவுள் மாற்றினார் (தொடக்கநூல் 1:1,2,9,10). உயிரினங்களை ஒழுங்குபடுத்தி வாழச் செய்தார். (திருப்பாடல்கள் 65:9). உயிர்வாழ்வன அனைத்தும் இணைந்து வாழச் செய்தார் (திருப்பாடல்கள் 104:14). உயிர் வாழ்வனவற்றில் கடவுளின் ஆற்றலும் அன்பும் சிறப்பாக வெளிப்படுகின்றன (யோபு 38:24–38). நாம் உயிர்வாழ்வனவற்றை பேணி பாதுகாத்து கடவுளுடன் இணைந்து செயற்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் அட்டவணையை குழுக்களாகப் பூர்த்தி செய்க.**

| **உயிரினங்கள்** | **வாழ்ந்த சூழல்** | **இன்றைய குழப்பமான நிலை** | **பொருத்தமானதாக மாற்ற செய்ய வேண்டியவை** |
|---|---|---|---|
| 1 தாவரங்கள் | ஏற்புடைய சூழல் | மண்ணரிப்பு, தீய வாயுக்கள் | தாவரங்கள் வாழக்கூடிய இடத்தைப் பண்படுத்தல், தீய வாயு உருவாக்குதலைத் தவிர்த்தல். |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் நல்வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : இறையன்புக்கு விலங்குகளின் நற்பண்புகளை தொடருவதன் மூலம் சான்று பகர்வர்

**செயற்பாடு 1.2** : விலங்குகளின் நற்பண்புகளை தொடர்ந்தாற்றுவதன் மூலம் நாம் கடவுளுக்கு சான்று பகர்வோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 1.2.1 இலுள்ள தகவற் கோவை
- இணைப்பு 1.2.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா
- உற்சாகமான எறும்புகளையும், உறுதிமிக்க உழவு மாடுகளையும் (நேரடியாக அல்லது ஒலி / ஒளிப்பேழை) அவதானிக்க ஏற்படலாம்.)

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 1.2.1**

- உற்சாகமாக உறுதியோடு வேலை செய்து கொண்டிருக்கும் எறும்புகள் உழவுமாடுகள் என்பனவற்றை அவதானித்த மாணவர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்த இடமளியுங்கள்
- இணைப்பு 1.2.1 இலுள்ள தகவல் கோவையை வாசித்து விளங்கிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

- கடவுள் விலங்கு உலகைப் (Animal world) படைத்தார் என்பது (தொடக்கநூல் 1:20-25)
- விலங்குகளிடம் நல்ல பண்புகள் காணப்படுகின்றன என்பது.

  உதாரணம் எறும்புகள் சோம்பேறித்தன மற்றவை மிகவும் சுறுசுறுப்பானவை
- விலங்குகளிடம் உள்ள தீய பண்புகளை நாம் பின்பற்ற கூடாது என்பது. உதாரணம் நரியின் தந்திரமான ஏமாற்றுக்குணம்
- விலங்குகளின் நற்பண்புகளை நாம் பின்பற்ற வேண்டும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 1.2.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 1.2.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம், எழுது கடதாசி, நிறப்பேனா, நற்பண்புமிக்க விலங்குகளை சித்தரிக்கும் படம் போன்றவற்றை வழங்குங்கள் எழுது கடதாசி நிறப்பேனா போன்றவற்றை வழங்குங்கள்.
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

(15 நிமிடங்கள்)

**படிமுறை 1.2.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- ஆரோக்கியமான விமர்சனங்களை பகிர்ந்துகொள்ள இடமளியுங்கள்
- கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- விலங்குகளின் நற்பண்புகள் கடவுளின் அன்புக்கும் ஆற்றலுக்கும் சான்று பகர்கின்றன என்பது
- விலங்குகளின் நற்பண்புகளில் நாம் கடவுளின் விருப்பத்தை அறியலாம் என்பது.
  எறும்பு – சுறுசுறுப்பு ( நீதிமொழிகள் 6:6–8)
  எருது – உழவு வேலை (நீதிமொழிகள் 14:14)
  நாய் – நன்றியுணர்வு
- நாம் கடவுளின் படைப்பாகிய வலங்குகளை பொறுப்போடு பாதுகாத்து பராமரிக்க வேண்டும்.
- விலங்குகள் மூலம் கடவுள் மனுக்குலத்தை பராமரிக்கின்றார் என்பது
  ஆடு– இறைச்சி
  பசு– பால்
  நாய்– வீட்டைக்காக்கும்
- நாம் கடவுளின் படைப்பாகிய விலங்குகளை பொறுப்போடு பாதுகாத்து பராமரிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. விலங்கின உலகை விளக்குவர்.
2. நற்பண்புகள் மிக்க விலங்குகள் மற்றும் அதன் பண்புகளையும் அட்டவணைப்படுத்துக.
3. விலங்குக்ளில் நற்பண்புகளின் கடவுளின் விருப்பம் தெளிவாகின்றது. என்பதை உறுதிபடுத்தி மற்றவர்களுக்கு கூறுவர்.
4. "விலங்குகளை பாதுகாப்பது எமது நம் 'கடமை' எனத் தீர்மானித்து பத்திரிகைக்கு ஒரு கட்டுரை வரைவர்

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்**

- ஒவ்வொரு குழுவில் உள்ளவர்களும் தத்தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி, செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்கத் தயாராகுங்கள்.

**தகவல் கோவை** **இணைப்பு 1.1.1**

கடவுள் படைத்தவைகளில் விலங்கின உலகம் (Animal world ) மிகவும் முக்கியமானதாகும். கடவுளின் அன்பை ஆற்றலை விலங்குகள் தமது நற்செயல் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. (நீதிமொழி 6:6-8 14:14) முக்கியமாக உணவு (ஆடு), பால் (பசு), கம்பளியாடு (உடை), வருமானம் (செம்மறியாடு, வெள்ளாடு) போன்றவற்றுக்காக இதனால் மனுக்குலம் விலங்குகளை பொறுப்போடு பாதுகாத்து பராமரிக்க வேண்டும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 1.2.2**

1. கடவுளின் படைப்பில் விலங்குகளின் சிறப்பை திருவிலியத்தின் அடிப்படையில் விளக்குங்கள்.
2. எறும்பின் நற்பண்பான "சுறுசுறுப்பை" மதித்து பிறருக்கு எடுத்துரையுங்கள்.
3. நற்பண்புகளில் கடவுளின் அன்பையும் ஆற்றலையும் உணர்ந்து உமது நண்பருக்கு கடிதம் வரையுங்கள்
4. விலங்குகளின் நற்பண்புகளை சேகரித்து மனுக்குலம் பின்பற்ற 'வழிகாட்டி' ஒன்றை தயாரியுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **1.0** | : | கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் நல்வாழ்வு வாழ்வர். |
| **தேர்ச்சி மட்டம்** | **1.3** | : | இறையன்பு குறித்து ஒளிவர்வன மூலம் சான்று பகர்வர் |
| **செயற்பாடு** | **1.3** | : | ஒளிவர்னவற்றின் பயன்கள் மூலம் இறையன்பு தொடர்பாக சான்று பகர்வோம். |
| **நேரம்** | | : | 40 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 1.3.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 1.3.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- எழுது தாள்
- நிறப்பேனா
- ஒளிர்வனவற்றை (நேரடியாக அல்லது ஒலி ஒளிப் பேழை) அவதானிக்க ஏற்ற படம்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படிமுறை 1.3.1

- ஒளிர்வனவற்றை (ஒளிப்பிழம்புகள் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள்) அவதானித்த மாணவர்களின் எண்ணங்களை பகிர்ந்து கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்.
- இணைப்பு 1.3.1 உள்ள தகவல் கோவையை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ள மாணவர்களுக்கு இடமளியுங்கள்.

பின்வரும் செய்திகளை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- ஒளிர்வன (ஒளிப்பிழம்புகள்) அனைத்தும் கடவுள் படைத்தார். ( தொடக்க நூல் 1:14-19) (திருப்பாடல்கள் 136:7-9)
- கடவுள் ஒளிர்வனவற்றை மனுக்குலம் உட்பட உயிரினங்கள் அனைத்தும் வாழ பயன்படுத்தப்படுகின்றார்.
- ஒளிர்வன பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது
- நாம் சூழல் மாசுறுவதை தவிர்ப்பதன் மூலம் ஒளிர்வனவற்றை பாதுகாப்புடன் பொறுப்பாக பாவிக்க வேண்டும்.

(10 நிமிடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 1.3.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 1.2.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம் எழுது தாள் கடதாசி நிறப்பேனா, ஒளிர்வனவற்றை (ஒளிப்பிழம்புகள்) சித்தரிக்கும் படம் போன்றவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

**படிமுறை 1.3.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை பகிர்ந்து கொள்ள ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்.
- கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- மனுக்குலத்தின் மீது கடவுள் கொண்டுள்ள அன்பை ஒளிர்வன வெளிக்காட்டுகின்றன.
- கடவுள் ஒளிர்வன மூலம் மனுக்குலம் உயிரினங்கள் அனைத்தையும் வலுவூட்டுகின்றார்.
- மனுக்குலத்தின் கடமை கடவுளுடன் இணைந்து ஒளிர்வனவற்றை பாதுகாப்பது என்பது
- ஒளிர்வனவற்றை நாம் உரிய முறையில் பொறுப்புடன் பராமரித்து பாதுகாக்க வேண்டும் என்பது

**கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்**

1. ஒளிர்வனவற்றை பெயரிடுக
2. ஒளிர்வனவற்றை பராமரிக்கவும் பாதுகாக்கவும் முன்வருவர்
3. ஒளிர்வனவற்றில் கடவுளின் அன்பையும் ஆற்றலையும் காணமுடியும் என்பதை உறுதிப்படுத்தி பகிர்ந்து கொள்வர்
4. ஒளிர்வனவற்றை மதித்து அவற்றுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தும் மன்றாட்டு ஒன்றை எழுதுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவிலும் தத்தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்

**தகவல் கோவை** **இணைப்பு 1.3.1**

கடவுளுடைய படைப்பில் ஒளிர்வன (ஒளிப்பழம்புகள்) முக்கியத்துவமானவையாகும். இவை மனுக்குலத்தினதும் முழு உயிரினங்களதும் வாழ்வுக்காக இயற்கை சமநிலையைக் காக்கவும் கடவுளால் பாவிக்கப்படுகின்றன.

ஒளிர்வனவற்றில் கடவுளின் அன்பை கடவுளின் ஆற்றலையும் காணலாம். நாம் பொறுப்புடன் ஒளிர்வனவற்றை பாதுகாத்து பராமரிக்க வேண்டும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 1.3.2**

பின்வருவனவற்றை பற்றி சிறு குறிப்பு எழுதுக

குழு 1 – ஒளிர்வன கடவுளின் படைப்புக்கள்
குழு 2 – ஒளிர்வன மனுக்குலத்தை வாழச் செய்கின்றன.
குழு 3– ஒளிர்வனவற்றில் கடவுளின் அன்பையும் ஆற்றலையும் தரிசிக்கலாம்.
குழு 4 – ஒளிர்வனவற்றை பொறுப்புடன் பராமரிப்பது கடவுளுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் நல்வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : இறையன்பை கடல் நீர்வளங்கள் மூலம் உணர்ந்து சான்று பகர்வர்

**செயற்பாடு 1.4** : கடல், நீர்வளங்களின் பயன் மூலம் இறையன்பிற்கு சான்று பகர்வோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 1.4.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 1.4.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா
- கடல், நீர் வளங்களை (நேரடியாக அல்லது ஒலி ஒளிப்பேழை ) அவதானிக்க ஏற்ற படம்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 1.4.1**

- கடலையும் நீர்வளங்களையும் அவதானித்த மாணவர்கள் தத்தம் எண்ணங்களை வெளிப்படுத்த இடமளியுங்கள்
- இணைப்பு 1.4.1 உள்ள தகவல் கோவையை வாசித்து விளங்கிக் கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்.
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

| |
|---|
| • கடவுள் கடலையும் நீர் வளங்களையும் படைத்தார். (தொடக்க நூல் 1:10) |
| • கடல் நீர்வளங்கள் மனுக்குலத்திற்கு உதவுகின்றது. |
| • கடல் நீர்வளங்கள் உயிர் இனங்களின் வாழ்க்கைக்கு உதவுகின்றன. |
| • நாம் நீரை வீணாக்கக் கூடாது. |

( 10 நிமிடம்)

**படிமுறை 1.4.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 1.4.2 உள்ள செயற்பாட்டுப்படிவம், திருவிவிலியம், எழுது தாள், நிறப்பேனா, கடலையும் நீர்வளங்களையும் சித்தரிக்கும் படம் போன்றவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

(15 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 1.4.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- கடல், நீர்வளம் மனுக்குலத்தின் வாழ்வுக்கு மிகவும் முக்கியமானவை.
- கடவுளின் அன்பை ஆற்றலை கடல் நீர்வளங்கள் போன்ற படைப்புகளில் காணலாம்.
- (தொடக்கநூல் 1:10 திருப்பாடல்கள் 104:24–26)
- கடலையும் நீர்வளங்களையும் மனுக்குலம் பொறுப்பான முறையில் பாவிக்க வேண்டும் என்பது.
- கடலையும் நீர்வளங்களையும் மனுக்குலம் மனித மேம்பாட்டுக்காக பாவிக்க முன்வர வேண்டும்.

**கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்**

1. சில நீர் வளங்களை பெயரிடுவர்
2. நீர் வளங்களைப் பாதுகாக்க பொருத்தமான முறையில் உபயோகிக்க முன்வருவர்.
3. நீர் வளங்கள் கடவுளின் அன்பு மற்றும் ஆற்றல் என்பவற்றுக்கு சான்று பகிர்கின்றன என்பதை உறுதிப்படுத்தி மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வர்
4. நீர் வளம் மாசுறும் வகைகள் மாசுறாமல் மற்றும் பாதுகாப்பதற்கு உரிய முறைகளைச் சேகரித்து திரட்டுவர்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவில் உள்ளவர்களும் தத்தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 1.4.2**

பின்வருவரும் அட்டவணையை பூர்த்தி செய்க

| நீர்வளங்கள் | படைத்தவர் | பயன்பெறுவர் | நீர்வளங்களின் இன்றைய நிலை | நீர்வளங்களை பாதுகாக்கவும், பாவிக்கவும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | | | | |
| கடல் | கடவுள் | மனுக்குலமும் உயிரினங்களும் | மாசுபடுத்தப்பட்டுள்ளது | தொழிற்சாலை கழிவுகளை கடலில் இடுவதை தடுக்க வேண்டும். |
| | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் நல்வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.5** : கடவுள் மனுக்குலத்துடன் இருக்கிறார் என்பதற்கு சான்று பகர்வர்

**செயற்பாடு 1.5** : நாம் இறையன்பை படைப்புகளில் உணர்ந்து கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பதற்கு சான்று பகர்வோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 1.5.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 1.5.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 1.5.1**

- படைப்புகளில் கடவுளின் அன்பு 'கடவுள் நம்மோடு வாழ்கின்றார்' என்னும் சிந்தனைகள் பற்றி மாணவர்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.
- இணைப்பு 1.5.1 உள்ள தகவல் கோவையை அனைவரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் ஒரிரு முறை வாசியுங்கள்.
- பின்வருவனவற்றை விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

> - கடவுளின் அன்பு ஆற்றல் படைப்புகளில் வெளிப்படுகின்றது.
> - கடவுள் படைப்புக்கள் மூலம் மனுக்குலத்தில் அன்பு செய்தார்.
> - கடவுள் நம்மோடு வாழ்கிறார்.
> - நாம் கடவுளுடன் வாழ்ந்து அவரது அன்பிற்கு ஏற்ப பொறுப்பாக பொறுப்பாக படைப்புக்களை பாதுகாத்து பராமரிக்க வேண்டும்.

**படிமுறை 1.5.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 1.5.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம் எழுது தாள் நிறப்பேனா போன்றவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 1.5.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- ஆரோக்கியமான விமர்சனங்களை பகிர்ந்து கொள்ள வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- கடவுளின் அன்பிற்கு படைப்புக்கள் ஒவ்வொன்றும் வாழ்வு மூலம் சான்று பகிர்கின்றன.
- 'கடவுள் நம்மோடு' என்பதற்கு மனுக்குலம் சான்று பகிர்கின்றது. (திருப்பாடல் 121, மத்தேயு 1:23 ஏசாயா 7 : 14)
- நாம் பொறுப்போடு படைப்புக்களை பராமரித்து பாதுகாப்பதன் மூலம் கடவுள் நம்மோடு வாழ்கிறார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

## கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்

1. படைப்புகளிலிருந்து கடவுளின் அன்பை ஆற்றலை எப்படி உணர்ந்து கொள்கின்றனர் என விளக்குவர்.
2. 'கடவுள் நம்மோடு' என்பதை உறுதிப்படுத்தி பிறருடன் பகிர்ந்து கொள்வர்.
3. கடவுளின் படைப்புக்களை பொறுப்புடன் பாவித்து பாதுகாக்க எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் என உரியவர்களுடன் கலந்துரையாடி சேகரிப்பர்.
4. மனுக்குலம் படைப்புக்களை மதிக்கின்றது, மதிப்பதில்லை எனும் சிந்தனைகளை உறுதிபடுத்தும் சம்பவங்களை அட்டவணைப்படுத்துக.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்தவும்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை** **இணைப்பு 15.1**

உலகையும் அதிலுள்ள அனைத்தையும் சிறப்பாக மனுக்குலத்தையும் படைத்தவர் கடவுள் (தொடக்கநூல் 12) படைப்புகளில் கடவுளின் அன்பையும் ஆற்றலையும் நாம் உணர்ந்து கொள்ள முடியும்

அத்துடன் கடவுள் எம்மை படைத்தது மட்டுமல்ல எம்முடன் வாழ்கின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். எமது நாளாந்த அனுபவங்கள் இதனை நித்தமும் உறுதிப்படுத்துகின்றன.

நாம் படைப்புகளை பொறுப்போடும் கரிசனையோடும் பாதுகாத்து பராமரிக்க வேண்டும் சுயநலத்திற்காக படைப்புக்களை பாவிக்கக்கூடாது. உலக வளங்களின் அனைத்து மனுக்குலத்தின் வாழ்வுக்கு உதவுவது போல நாம் அனைத்து படைப்புக்களையும் நன்கு கவனிக்க வேண்டும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 15.2**

பின்வருவரும் தலைப்புகளில் விவாதங்களை குழுவடிப்படையில் நிகழ்த்துங்கள்.

குழு 1- கடவுளின் அன்பை படைப்புகளில் காணலாம்/ காணமுடியாது

குழு 2-கடவுளின் ஆற்றலை படைப்புகளில் காணலாம்/ காணமுடியாது.

குழு 3 – மனுக்குலம் படைப்புகளை பொறுப்புடன் கவனிக்கின்றது/ கவனிப்பதில்லை

குழு 4 மனுக்குலம் படைப்புகளை அதிகரிக்கின்றது. மனுக்குலம் படைப்புகளை அழிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0 :** இயேசுவின் பண்புகளின் அடிப்படையில் வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.1 :** கடவுளின் வலுவூட்டலுக்கு சான்று பகர்ந்த எலியா போல இயேசுவின் பண்புகளோடு வாழ்வர்.

**செயற்பாடு 2.1 :** கடவுள் வலுவூட்டுகின்றார் என்பதற்கு சான்று பகர்ந்த எலியா போல, இயேசுவின் பண்புகளோடு வாழ்வோம்.

**நேரம் :** 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 2.1.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 2.1.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா
- எலியாவின் படம்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 2.1.1**

- இணைப்பு 2.1.1 உள்ள தகவல் கோவையை ஓரிரு முறை வாசித்து விளங்கிக் கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்.
- 'கடவுள் எலியாவை நெருக்கடி நிலையில் வலுவூட்டினார்' என்பது தொடர்பாக மாணவர்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துவார்கள்.

(10 நிமிடம்)

- எலியா நற்பண்புகளுடன் வாழ்ந்த ஓர் இறைவாக்கினர்.
  நீதி – 1 அரசர்கள் 21
  இரக்கம் – 1 அரசர்கள் 17 : 8 – 23
- இறைவாக்குப்பணி காரணமாக நெருக்கடி நிலைக்குள்ளாகி அதிர்ச்சியடைந்த எலியாவை கடவுள் வலுவூட்டி பாதுகாத்தார். (1 அரசர் 19:4–18)
- இயேசு நமக்கு வலுவூட்டுகின்ற ஒருவர் என்பது
- நாம் மற்றவர்களை வலுவூட்ட வேண்டும் என்பது.

(10 நிமிடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 2.1.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 2.1.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவியம் எழுது தாள் நிறப்பேனா எலியாவின் படம் போன்றவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

(30 நிமிடங்கள்)

**படிமுறை 2.1.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- இயேசுவின் நற்பண்புகளில் (எலியாவை போல) மனுக்குலம் வாழ வேண்டும்.

  நீதி — மத்தேயு 5:6,10

  இரக்கம் – மத்தேயு 5:7

  அமைதி — மத்தேயு 5:09

- நெருக்கடி நிலையில் சிக்கித் தவிப்போருக்கு இயேசுவின் பண்புகள் உதவுகின்றன.

  கவலைப்படுவதால் நன்மை ஏற்படாது (மத் 6:25–34), நெருக்கடியை எதிர் கொள்ளும் துணிவு (மத் 26:39), நெருக்கடிநிலையை வன்முறையைப் பாவித்து எதிர் கொள்வது (லூக்கா 9:54).

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்**

1. இயேசுவின் பண்புகளில் முக்கியமான ஒன்று வலுவூட்டப்படுவது என்பதை விவிலிய உதாரணங்களுடன் விளக்குவர்.
2. இயேசு நெருக்கடி நிலைகளை எதிர் கொண்ட போது வன்முறையை பயன்படுத்தவில்லை என்பதைப்பற்றி கலந்துரையாடி பகிர்ந்து கொள்வர்.
3. இயேசுவின் பண்புகள் நமது சமுகத்திற்கு வலுவூட்டுகின்றன என முன்வைப்பர்.
4. இயேசுவின் பண்புகளின்படி வலுவூட்டப்பட்டவராக வாழத் தீர்மானம் எடுப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவில் உள்ளவர்களும் செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரயாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்

**தகவல் கோவை** **இணைப்பு 2.1.1**

இயேசுவின் பண்புகளையுடையவர்களாக அனைவரும் மாற வேண்டும். சிறப்பாக இயேசு நெருக்கடி நிலைகளை வலுவுள்ளவராக ( தைரியம் ) எதிர் கொண்டார். நீதி இரக்கம், அமைதி போன்ற பண்புகளை விதைத்தார் ( மத்தேயு 5:6–10). கவலைப்பட்டுக் கொண்டே இருப்பதால் எந்த நன்மையுமில்லை என்றார். துணிவுடன் சிக்கல்களை ( மத்தேயு 25–34) எதிர் கொண்டார்.

எலியா நெருக்கடி நிலையை எதிர் கொள்ள முடியாதவராக ஓடிய போது கடவுள் அவரை வலுவூட்டினார். நீதி, இரக்கம், போன்ற நற்பண்புகளுடன் எலியா இறைபணியில் ஈடுபட்டார். ( 1 அரசர் 17, 19, 21). கடவுள் எலியாவுக்கு வலுவூட்டியது போல நாம் இயேசுவின் பண்புகளால் வலுவூட்டப்படுகின்றோம்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 2.1.2**

பின்வரும் நெருக்கடி நிலையில் இயேசுவின் பண்புகளால் வலுவூட்டப்பட்டவராக எப்படி வாழ்வீர் என கலந்துரையாடி பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| **நெருக்கடி நிலைகள்** | **இயேசுவின் பண்புகளால் வலுவூட்டப்பட்டவரின் நடவடிக்கைகள்** |
|---|---|
| 1. விபத்து | |
| 2. உறவினரின் மரணம் | |
| 3. நண்பர் நோய்வாய்ப்படல் | |
| 4. சுனாமி (ஆழிப்பேரலை) | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0 :** இயேசுவின் பண்புகளின் அடிப்படையில் வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** கடவுள் பாலைவனத்தில் இஸ்ரவேலரை உணவூட்டி பராமரித்தது போன்று இயேசுவின் பண்புகளால் பராமரிக்கப்படுவர்.

**செயற்பாடு 2.2 :** இயேசு பராமரிக்கின்றார் என்பதற்கு சான்று பகர்வோம்.

**நேரம் :** 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 2.2.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 2.2.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 2.2.1**

- இணைப்பு 2.2.1 உள்ள தகவல் கோவையை ஓரிரு முறை வாசித்து விளங்கிக் கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்.
- இஸ்ரவேலர் பாலைவனத்தனூடாக விடுதலைப்பயணத்தை மேற் கொண்ட போது கடவுள் அவர்களுக்கு உணவூட்டி பராமரித்தார் என்பது பற்றிய மாணவர்களின் எண்ணங்களை வெளியிட இடமளியுங்கள்.
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

> - எகிப்திலிருந்து இஸ்ரவேலர் கானான் நோக்கி பாலைவனத்தினூடாக விடுதலைப்பயணத்தை மேற் கொண்ட போது இறைபராமரிப்பு அவர்களுக்கு கிடைத்தது.
>
>   உணவு- விடுதலைப்பயணம் 16:4-35
>
>   நீர் - விடுதலைப்பயணம் 17:1-6
>
>   இறைபராமரிப்பு - திருப்பாடல்கள் 105:39-41
> - நாம் இறைபராமரிப்பை ஏற்றுக் கொண்டவர்களாக நன்றியுணர்வுடன் வாழ வேண்டும் என்பது.

(10 நிமிடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 2.2.2
- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 2.2.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் எழுது தாள் நிறப்பேனா போன்றவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

(30 நிமிடங்கள்)

படிமுறை 2.2.3
- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- இஸ்ரவேலர் இறைபராமரிப்பில் வாழ்ந்தனர். (திருப்பாடல்கள் 105:39–41)
- இயேசுவின் பண்புகளால் நாம் பராமரிக்கப்படுகின்றோம்.
  உதாரணம்
  - இயேசு தம் வாழ்வை பகிர்ந்து கொண்டார்.
    (யோவான் 1:1–15, பிலிப்பியர் 2:6–11
  - தீமைகளிலிருந்து வாழ்வை தூய்மைப்படுத்தினார். (யோவான் 2:13–22)
  - நற்தலைமைத்துவத்தை பகிர்ந்து கொண்டார். ( மாற்கு 6:20–44)
- இயேசுவைப் போல் நாமும் மற்றவர்களை பராமரிப்பதில் ஈடுபட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்**

1. இயேசுவின் பண்புகளில் முக்கியமான ஒன்று 'பராமரித்தல்' என்பதை விவிலிய உதாரணங்களுடன் விளக்குவர்.
2. இறைபராமரிப்பு தேவைப்படும் போது மட்டுமே வழங்கப்படுகின்றது என்பதை இஸ்ரவேலரின் வரலாற்று விடுதலைப் பயண பின்னணியில் பார்த்து, புரிந்து கூறுவர்.
3. இயேசுவின் பராமரிப்பு தன்னலம் சார்ந்ததல்ல மாறாக பொது நலம் சாரந்தது என்பதை முன்வைப்பர்.
4. இயேசுவைப் போல பிறரை பராமரிப்பதில் ஈடுபடுவேன் என சொந்தமாக தீர்மானம் எடுங்கள்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை** **இணைப்பு 2.2.1**

இயேசுவின் பண்புகளின் அடிப்படையில் வாழ்வதே நமக்கு மிகவும் பொருத்தமானது. சிறப்பாக இயேசு மக்களை பராமரிப்பதில் ஈடுபட்டார். தன்னுடைய வாழ்வை மனுக்குல விடுதலைக்காக முழுமையாக பாவித்தார். தீமைகளை கண்டித்தார். தலைமைத்துவமற்று வாழ்ந்த மக்களுக்கு நல்ல தலைமைத்துவத்தை முன்வைத்தார். இயேசுவின் வாழ்க்கை முறை, போதனை, செயற்பாடுகள் அனைத்துமே மனுக்குலத்தை நல்வழிக்கு இட்டுச் செல்லும் ஒன்றாக அமைந்தது. எனவே இயேசு தன் முழுவாழ்வின் மூலம் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை பறைசாற்றி மனுக்குலத்தை பராமரித்தார், இன்றும் பராமரிக்கிறார்.

இஸ்ரவேல் மக்களுக்கும் இறைபராமரிப்பின் மூலம் தம் வாழ்க்கையை தொடர்ந்தனர். எகிப்தில் அடிமை வாழ்வு மத்தியிலும் கடவுள் அழிவிலிருந்து காப்பாற்றினார். இஸ்ரவேலின் விடுதலைப் பயணத்தின் போது அவர்களை பராமரித்தார். உணவு, தண்ணீர் பாதுகாப்பு, வழிகாட்டல் போன்றவற்றை வழங்கி அவர்களது தேவைகளை தீர்த்தார்.

கடவுள் இஸ்ரவேலரை பராமரித்தது போல நாம் இன்னும் கடவுளின் பராமரிப்பை இயேசு மூலம் புரிந்து கொள்கின்றோம். எம் வாழ்வு இயேசுவின் வழியில் பிறருக்கு பராமரிப்பை ஏற்படுத்துவுதாக அமைய வேண்டும் . அப்போது மட்டுமே எமது வாழ்வு அர்த்தம் பெறும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 2.2.2**

பின்வரும் சந்தர்ப்பங்களில் நீர் எப்படி இறைபராமரிப்பை புரிந்து கொண்டீர் என்றும் மற்றவர்களுக்கு பராமரிப்பு வழங்கினீர் எனவும் அட்டவணைப்படுத்துக.

| சந்தர்ப்பங்கள் | நீர் இறைபராமரிப்பை புரிந்து கொண்டமை | நீர் பிறரை பராமரித்தமை |
|---|---|---|
| 1. நோய்<br>2. உறவினரின் சாவு<br>3. போர்<br>4. துன்பம் / விரக்தி<br>5. வறுமை | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : இயேசுவின் பண்புகளின் அடிப்படையில் வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.3**: கடவுள் இஸ்ரவேலரை செங்கடல் பயணத்தின் மூலம் ஒடுக்கு முறையாட்களிடமிருந்து பாதுகாத்தது போல இயேசுவின் பண்புகளால் பாதுகாக்கப்படுவர்.

**செயற்பாடு 2.3** : இயேசுவின் பண்புகளால் பாதுகாக்கப்படுகின்றோம் என்பதற்கு சான்று பகர்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 2.3.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 2.3.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 2.3.1**

- இணைப்பு 2.3.1 உள்ள தகவல் கோவையை வாசித்து நன்கு விளங்கிக் கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்
- எகிப்தியரிடமிருந்து இஸ்ரவேல் மக்கள் ஒடுக்குமுறைக்கு தப்பி உயிர்காக்கப்பட கடவுள் செங்கடலை பிரித்தார் என்பதை பற்றி மாணவர்கள் சிந்திப்பவற்றை பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வண்ணம் கலந்துரையாடலை நடத்துங்கள்.
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நடத்துங்கள்

- கடவுள் மனுக்குலத்துடன் வாழ்கின்றனர்
- மனுக்குலம் ஆபத்தை எதிர் நோக்கி சிக்கித்தவிக்கும் போது கடவுளை நோக்கி கூக்கிரலிடுகின்றது.
- கடவுள் மனுக்குலத்தை ஆபத்திலிருந்து விடுவிக்க வரலாற்றில் தலையிடுகின்றார்

  செங்கடலுடான பயணம் (விடுதலைப்பயணம் 14:15-31)
- மனுக்குலம் ஆபத்துகளை எதிர் கொள்ள கடவுள் இன்றும் வழிநடத்துகின்றார்.

(10 நிமிடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 2.3.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 2.3.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் எழுது தாள் நிறப்பேனா போன்றவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

(30 நிமிடங்கள்)

**படிமுறை 2.3.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை ஒப்படைக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- கடவுள் ஆபத்துக்களை எதிர் கொள்ள மனுக்குலத்தை வழிநடத்துகின்றார் என்பது
- இயேசு மனுக்குலத்தை பாதுகாக்கின்றார் என்பது.

  உதாரணம் : இயேசுவின் போதனைகள் செயல்கள் வாழ்க்கை முறை மூலம்

  மாற்கு 14:32–42 யதார்த்தத்தை எதிர் கொள்ளல்

  மாற்கு 9:2–14 சுயபாதுகாப்பாகவே

  மாற்கு 5:35–41 நம்பிக்கை சாவின் மத்தியிலும்.
- நாம் எமது உடலில் குடியிருந்தாலும் உடலை விட்டு குடி பெயர்ந்தாலும் (சாவு) கடவுளோடு இருக்கின்றோம்.

  11 கொரிந்தியர் 5:9
- இயேசு அருளிய பாதுகாப்புடன் வாழும் நாம் மற்றவர்களைப் பாதுகாக்க வேண்டும் என இயேசு விரும்புகின்றார்.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் ஆபத்துக்களை பெயரிடுவர்.
2. ஆபத்துக்களை எதிர் கொள்ள, கடவுள் அருளிய அருள் , வழிகாட்டல் , பாதுகாப்பு பற்றி சிந்தித்து தெளிவு பெறுவர்.
3. ஆபத்துக்களை இறைவிருப்பப்படி எதிர் கொள்கிறோமா சுயநல மனப்பான்மையுடன் எதிர் கொள்கிறோமா என உரியவர்களுடன் கலந்துரையாடி வேறுபடுத்தி விபரிப்பர்.
4. நாம் பாதுகாப்பை அனுபவிப்பது மட்டுமல்ல மற்றவர்களை பாதுகாக்கும் போது மட்டுமே மனுக்குலம் பாதுகாக்கப்படும் என தீர்மானித்து மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வர்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவில் உள்ளவர்களும் செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரயாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்

**தகவல் கோவை** **இணைப்பு 2.31.**

மனுக்குலம் கடவுளால் படைக்கப்பட்டு உறவோடு வாழும்படி இந்த உலகில் குடியமர்த்தப்பட்டது. சிலருடைய தீய எண்ணங்கள் பகிராமை ஒடுக்குமுறை தன்நலம் ….. போன்றவற்றால் பலர் ஆபத்துக்களை அன்றாடம் எதிர் கொள்கின்றனர். முக்கியமாக எகிப்தியரின் ஒடுக்குமுறை காரணமாக இஸ்ரவேலர் ஆபத்தை எதிர் கொண்டனர்.

ஆபத்துக்களை எதிர் கொள்ள கடவுள் அருள் தருகின்றார். பல சந்தர்ப்பங்களிலும் மனுக்குலம் பாதுகாக்கப்படுகின்றது. எனினும் நாம் தொடர்ந்தும் சவாலை எதிர் கொண்டாலும் வாழ்ந்தாலும் அல்லது மரணத்திற்கு முகங் கொடுத்தாலும் கடவுளுக்குள் வாழ்கின்றோம். ஏனெனில் வாழ்வு சாவுக்கும் அப்பாற்பட்டது.

நாம் சுயநலமாக கடவுளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை நோக்காமல் பொது நலத்துடன் சிந்திக்க வேண்டும் என்பதே கடவுளின் நோக்கம். வாழ்வு ஒவ்வொருவரதும் உரிமை. எனினும் ஆபத்துக்கள் மனுக்குலம் மீது திணிக்கப்படுகின்றன. நாம் கடவுளின் வழிகாட்டலோடும் அருளோடும் அவற்றை எதிர் கொள்ள வேண்டும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 2.3.2**

பின்வரும் தலைப்பில் குழுக்களுக்கிடையே விவாதம் நடத்துங்கள் .

1. ஆபத்துக்களின் மத்தியில் கடவுள் மனுக்குலத்தை பாதுகாக்கின்றார்.
2. ஆபத்துக்களின் மத்தியில் கடவுள் மனுக்குலத்தை பாதுகாப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : இயேசுவின் பண்புகளின் அடிப்படையில் வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.4**: இயேசு அருளும் புத்துணர்வுடன் வாழ்வர்.

**செயற்பாடு 2.4** : இயேசு புத்துணர்வூட்டுகிறார் என்பதற்கு சான்று பகர்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 2.4.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 2.42 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- செயற்பாட்டுப்படிவம்.
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 2.4.1**

- இணைப்பு 2.4.1 உள்ள தகவல் கோவையை வாசித்து நன்கு விளங்கிக் கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்
- மனுக்குல்துக்கு இயேசு புத்துணர்வூட்டுகிறார் என்பது பற்றிய எண்ணங்களை மாணவர்கள் பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்.
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வண்ணம் கலந்துரையாடலை நடத்துங்கள்.

- மனுக்குலம் நன்கு வளமாக வாழ வேண்டும் என்பதே கடவுளின் நோக்கமாகும்.
- மனுக்குலத்தின் பொறுப்பற்ற செயல்கள் பலரைச் சோர்ந்து போகச் செய்கின்றது.
- தளர்ந்து போகும் வேளைகளில் கடவுள் புத்துணர்வூட்டுகின்றார். மாற்கு 6:45–52)
- நாம் மற்றவர்கள் தளர்ந்து போகாத வண்ணம் நிலையை மாற்றி புத்துணர்வு ஊட்ட வேண்டும்.

(10 நிமிடம்)

**படிமுறை 2.4.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 2.3.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் விவிலியம் எழுது தாள் நிறப்பேனா போன்றவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 2.4.3

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - மனுக்குலம் சோர்ந்து போகும் வேளைகளில் கடவுள் புத்துணர்வூட்டுகிறார்.
>   ஏசாயா 11:1
>   மாற்கு 6:45–52
> - இயேசு தீமைகளை கடந்து செயற்படுகின்றார்
> - தீமை மனுக்குலத்தை துன்புறுத்தி விரக்தியுறச் செய்தாலும் அதனை எதிர்த்து போராட வேண்டும்.
> - சோர்ந்து விரக்தியுறுவோருக்கு புத்துணர்வு ஊட்டும் இயேசுவின் பணியில் நாம் தனியாகவும் சமூகமாகவும் செயல்பட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. நாம் அன்றாடம் விரக்தியுறும் சந்தர்ப்பங்களை பெயரிடுங்கள்
2. விரக்தியிலிருந்து வெளியேறி புத்துணர்வு அடைய மன்றாட்டு ஒன்றை ஏறெடுப்பர்.
3. தீமையை எதிர் கொள்ளும் போராட்டம் புத்துணர்வுடன் தொடரப்பட வேுண்டும் என்பதை கலந்துரையாடி உறுதிப்படுத்துங்கள்
4. புத்துணர்வு கடவுளின் கொடை என்பதை உறுதிப்படுத்தி பிறருடன் பகிர்ந்து கொள்வர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- ஒவ்வொரு குழுவில் உள்ளவர்களும் செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரயாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை** **இணைப்பு 2.41.**

மனுக்குலம் இன்னல்களை எதிர்கொண்டு விரக்தியும் சோர்வுமடைந்து இருப்பது இன்று நாளாந்த வாழ்வாகிவிட்டது. சில தீயவர்களின் செயற்பாடும் சிந்தனைகளும் பல நல்லவர்களை துன்புறுத்துகின்றது. எனினும் தீமைக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்தாற்ற கடவுள் நல்லவர்களுக்கு புத்துணர்வு தருகின்றார்.

விவிலியத்தில் கடல் தீமையின் உறைவிடமாக அடையாள மொழியில் பாவிக்கப்பட்டுள்ளது (மாற்கு 6:45–52). கடவுளுடைய ஆட்சியில் தீமைக்கு இடமில்லை (திருவெளிபாடு 21:1–5). கடவுளால் தீமையை நசுக்கி நன்மையை வாழச் செய்ய முடியும். அதனை மனுக்குலம் விரும்பிச் செய்ய வேண்டும். கடல் நல்வளங்களில் ஒன்று என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. சுயநலத்துடன் தீமைவழியில் செயற்படாமல் மனுக்குல விடுதலைக்காக உழைக்கும் போது தீமை கட்டுப்படுத்தப்படும். ஒவ்வொருவரும் தனியாளாகவும் சமுகமாகவும் விரக்தியிலிருந்து மற்றவர்களை விடுவித்து புத்துணர்வூட்டும் இயேசுவின் பணியில் ஈடுபட வேண்டும் என்பதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு2.4.2**

பின்வரும் தலைப்பில் குழுக்களுக்கிடையே பேச்சுப் போட்டி நடத்துங்கள்

“ கடவுள் அருளும் புத்துணர்வுடன் தீமைக்கு எதிரான மனுக்குலத்தின் போராட்டம்”

அல்லது

‘தீமையை தீமையால் மேற் கொள்ளாமல் தீமையை நன்மையால் மேற் கொள்ள வேண்டும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : இயேசுவின் பண்புகளின் அடிப்படையில் வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.5**: இயேசு அருளும் புதுநம்பிக்கையுடன் வாழ்வர்.

**செயற்பாடு 2.5** : இயேசு புது நம்பிக்கையளிக்கிறார் என்பதற்கு சான்று பகர்வோம்..

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 2.5.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 2.5.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- செயற்பாட்டுப்படிவம்.
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 2.5.1**

- இணைப்பு 2.5.1 உள்ள தகவல் கோவையை வாசித்து நன்கு விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்
- 'இயேசு மனுக்குலத்திற்கு புது நம்பிக்கை ஊட்டுகின்றார் என்பது பற்றிய எண்ணங்களைப் பகிர மாணவர்களுக்கு இடமளியுங்கள்.
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வண்ணம் கலந்துரையாடலை நடத்துங்கள்.

> - மனுக்குலத்தின் வாழ்வுக்கு நம்பிக்கை அடிப்படையாகும்.
> - மனுக்குலம் பல சந்தர்ப்பங்களில் நம்பிக்கையை இழக்கின்றது.
> - இயேசு சீடர் மற்றும் மனுக்குலத்திற்கு நம்பிக்கையூட்டுகின்றார் என்பது (லூக்கா 24:13−35)
> - நாம் மற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டவேண்டும்.

(10 நிமிடம்)

**படிமுறை 2.5.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 2.5.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம், எழுது தாள், நிறப்பேனா போன்றவற்றை வழங்குங்கள்

**படிமுறை 2.5.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனுக்குலம் புது நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றது.
- நம்பிக்கையற்ற சமூக சூழ்நிலைகளிலும் புது நம்பிக்கையை இயேசுவின் உயிர்ப்பு தருகின்றது என்பது.
  (திருப்பாடல்கள் 23:3,4)
  (மாற்கு 16:1-8 14)
- உயிர்ப்பு தொடர்பான புரிந்துணர்வு மனுக்குலத்திற்கு புது நம்பிக்கை தரும்.
- நாம் நமது சமுகத்தின் உயிரோட்டத்திற்காகச் செயற்பட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்**

1. நம்பிக்கையூட்டும் (இயற்கையான; உதாரணம் பிறப்பு) சம்பவங்களை பெயரிடுவர்.
2. 'புதுநம்பிக்கை மனுக்குலத்துக்கு தொடர்ச்சியாக தேவை' என்பது பற்றி கலந்துரையாடி கருத்துக்களை சேகரிப்பர்.
3. இயேசுவின் சீடர்கள், இயேசுவின் உயிர்ப்புக்கு முன்பும் பின்பும் இருந்த உண்மை நிலையை விவிலிய உதாரணங்களுடன் தொகுப்பர்.
4. நம்பிக்கையிழந்த இலங்கை சூழ்நிலையில் சமுகவாழ்விலும் நம்பிக்கையூட்டும் செயற்பாடுகளில் எப்படி ஈடுபடலாம் என்பது பற்றி தீர்மானித்து பிறருடன் பகிர்ந்து கொள்வர்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்

**தகவல் கோவை** **இணைப்பு 2.5.1.**

நம்பிக்கை இழந்த சூழ்நிலைகளில் எப்போதும் கடவுள் புது நம்பிக்கையை வழங்குகின்றார். இஸ்ரவேலின் வரலாற்றிலும் இதனை காணலாம்.
சாவை நேரடியாகவோ மறைமுகமாகவோ சந்திக்கும் சூழ்நிலையில் நாம் வாழும் போது இயேசுவின் உயிர்ப்பு புது நம்பிக்கையை தருகின்றது. சீடர்கள் இயேசுவின் மரணத்தினால் கலங்கி நம்பிக்கையிழந்திருந்த வேளையில் இயேசுவின் உயிர்ப்பு சீடர்களுக்கு புத்துயிர் கொடுத்தது.
எமது சமுகம் உயிர்புறும்போது மட்டுமே நம் ஒவ்வொருவரின் வாழ்வும் பொருள்ளதாகும்

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 2.5.2**

பின்வரும் தலைப்பில் விவாதம் நடத்துக
மனுக்குலத்திற்கு கடவுள் புது நம்பிக்கை வழங்குகின்றார்.
மனுக்குலத்திற்கு கடவுள் புது நம்பிக்கை வழங்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : இயேசுவின் பண்புகளின் அடிப்படையில் வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.6:** இயேசு வலியுறுத்திய பகிர்தல் மூலம் புது உலகம் அமைத்து வாழ்வர்.

**செயற்பாடு 2.6** : இயேசுவின் புதிய உலகத்திற்கு பகிர்தல் மூலம் சான்று பகர்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 2.6.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 2.6.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- செயற்பாட்டுப்படிவம்.
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 2.6.1**

- இணைப்பு 2.6.1 உள்ள தகவல் கோவையை வாசித்து நன்கு விளங்கிக் கொள்ள வாய்ப்பு வழங்குங்கள் (ரொட்டி/ பாண் போன்றதை மாணவர்கள் பகிர்ந்து உண்ண இடமளியுங்கள்)
- பகிர்தல் பற்றிய மாணவர்களின் சிந்தனைகளை வெளியிட வாய்ப்பு வழங்குங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வண்ணம் கலந்துரையாடலை நடத்துங்கள்.

> - மனுக்குலத்தின் வாழ்வுக்கு 'பகிர்தல்' மிகத் தேவையானது
> - பகிராமையினால் பலர் துன்புறுத்துகின்றனர். நம்மிடம் இருப்பதை சிறுவன் போல பகிர்ந்து (யோவான் 6:1-13) மனுக்குலத்தை உருவாக்க இயேசு அழைக்கிறார். அன்பு தனியாளாக மட்டுமல்ல குடும்பமாகவும் பகிரப்படல் வேண்டும்.
> - பகிர்ந்து வாழ நாம் முன்வர வேண்டும்.

(10 நிமிடம்)

படிமுறை 2.6.2

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு 2.5.2 உள்ள செயற்பாட்டுப்படிவம், எழுது தாள், நிறப்பேனா போன்றவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 2.6.3

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

| |
|---|
| • பகிராமையே இன்று மனுக்குலம் துன்புறுவதற்கு காரணம். |
| • இயேசு அனைத்தையும் மனுக்குலத்துடன் பகிர்ந்து கொண்டார். |
| • ஒருவரோடொருவர் பகிர்வதன் மூலம் இயேசு சமூகமாக (புரிந்துணர்வுடன் பகிர்தல்) உள்ளான அமைதியை அனுபவிப்பவர்களாக வாழ இயேசு அழைக்கிறார். |

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்**

1. அப்பம் பகிர்ந்தளித்தல் (யோவான் 6:1–14) நிகழ்வை வெளிப்படுத்தும் பாடல் அல்லது கவிதை அல்லது கட்டுரை அல்லது சித்திரம் அமைப்பர்.
2. நம்மிடம் இருப்பதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டுமென தீர்மானித்து பிறருக்கு கூறுவர்.
3. மருத்துவமனைக்கு அல்லது சிறைக்கூடத்திற்கு அல்லது அகதிமுகாம்களுக்கு சென்று மாணவர்கள் தம்மிடமிருப்பதை பகிர்வர்.
4. பகிர்தலை வலியுறுத்தும் சில சுவரொட்டிகளை எழுதி பாடசாலைகளை அறிவூட்டுவதன் மூலம் இயேசுவின் புதிய உலகத்தை பறைசாற்ற முன்வருவர்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்கத் தயாராகுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் கோவை** **இணைப்பு 2.6.1.**

பகிர்ந்து கொள்ளாமல் தன்நலமாக சிலர் வாழ்வதால் மனுக்குலம் துன்புறுகின்றது. அடிப்படை மனித தேவைகள் கூட தீர்க்கபடாமலிருப்பதால் பலர் வேதனைப்படுகின்றனர்.

மனித உரிமைச் சட்டங்கள் பலவிதங்களிலும் பகிர்ந்து வாழும் புரிந்துணர்வு கொண்ட சமுகத்தை உருவாக்க விரும்புகின்றது. இயேசுவின் சீடர் தம்மிடம் இருப்பதை பகர்ந்து வாழும் சமுகமாக வாழ்ந்தனர் (திருத்தூதர்பணி 2:42−47). இவ்விதம் வாழ இயேசு நம்மை அழைக்கிறார்.

நாம் தனிப்பட்டோராகவும் சமுகமாகவும் அனைத்தையும் பகிரும் போது மட்டுமே மனுக்குலம் நலமுடன் வாழலாம். இன்றைய தன்னலமிக்க உலகை இயேசுவின் புதிய உலகத்திற்கேற்ப மாற்றுவோம்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 2.6.2**

பின்வரும் தலைப்பில் விவாதம் நடத்துக

மனுக்குலம் நிலைத்து இருப்பதற்கு பகிர்தல் அவசியம்
மனுக்குலம் நிலைத்து இருப்பதற்கு பகிர்தல் தேவையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : இயேசுவின் பண்புகளில் அடிப்படையில் வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.7** : தீமைக்கு சவாலிட்டு வாழ்வர்

**செயற்பாடு 2.7** : தீமைக்கு சவால் கொடுக்கும் இயேசுவின் புதிய உலகத்திற்கு சான்று பகிர்வோம்

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.7.1 இலுள்ள தகவல்
- இணைப்பு 2.7.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்.
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 2.7.1**

- இணைப்பு 2.7.1 இலுள்ள தகவல் கோவையை ஓரிருமுறை வாசித்து விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்.
- தீமைக்கு சவால்விடுக்கும் இயேசுவின் பண்பினை விவிலிய உதாரணங்களின் மூலம் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

> - தீமையை எதிர்த்து சவாலிடுவது இயேசுவின் பண்புகளில் ஒன்று என்பது
>
> | | | |
> |---|---|---|
> | 1. | லூக்கா 8:22–25 | |
> | 2. | மாற்கு 6:45–52 | தீமை |
> | 3. | மத்தேயு 8:23–27 | |
> | 4. | யோவான் 18:23 | வன்முறை |
> | 5. | லூக்கா 5:42 | சமயவாழ்வு |
>
> - விவிலிய அடையாள மொழி கடல் தீமையை குறிப்பிடுகின்றது என்பது
> - இயேசு எம்மை அணைத்து தீமைகளை சவாலிடும்படி அழைத்துள்ளார் என்பது.

**படிமுறை 2.7.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 2.7.2 உள்ள செயற்பாட்டுப்படிவம், திருவிலியம் எழுது தாள் நிறப்பேனா போன்றவற்றை வழங்குங்கள்.
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 2.7.3

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை ஒப்படைக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

- தீமை மனுக்குலத்தை மனித அவயவங்களில் மோசமாக சித்தரிக்கச் செய்கிறது.
- இயேசுவைப் போல தீமைகளுக்கு, எதிராக சவால் விடுப்பது மனுக்குலத்தின் பொறுப்பு என்பது
- தீமையை நன்மை மூலம் எதிர் கொள்ள வேண்டும் என்பது

உதாரணம்:

1. பகைவரிடம் அன்பு ( மத்தேயு 5:44)
2. மனித மாண்புடன் பிரச்சினைகளை எதிர் கொள்ளல் (மத்தேயு 5:22, 7:12)
3. காசை கடவுளாகக் கருதக் கூடாது (லூக்கா 18:24,25)
4. தீய ஆட்சியை கண்டித்தல் (லூக்கா 13:31: மாற்கு 10:4243)

- தீமையை சவால்விடுத்து நசுக்கி, கருத்தை விடுவிப்பதின் மூலம் இயேசுவின் புதிய உலகம் உருவாக நாம் உழைக்க வேண்டும்.

( 40 நிமிடம்)

## கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்

1. தீமையை தொடர்ந்து எதிர்த்தமை இயேசுவின் முக்கியமான பண்புகளில் ஒன்று என விவிலிய உதாரணங்களுடன் கூறுவர்.
2. தீமைக்கு விட்டுக் கொடுத்து வாழ முடியாது என்பதை உறுதிப்படுத்த பிறருக்கு கூறுவர்
3. தீமையை விட்டு நன்மையை தொடர கடவுள் நமது சமுகத்துக்கு அறிவும் தெளிவும் செயற்பாட்டுத் திறனையும் தரவேண்டும் என மன்றாடுங்கள்
4. சமுகத் தீமைகள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளை இன்றைய இலங்கை சூழ்நிலையில் அட்டவணைப்படுத்தி தொகுப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்கத் தயாராகுங்கள்

**தகவற் கோவை** **இணைப்பு 2.7.1**

மனுக்குலத்தின் நல்வாழ்வை சீரழிப்பது தீமையாகும். தீமையை கிறிஸ்தவ உலகம் சாத்தான் பிசாசு எனும் சொற்கள் மூலம் உருவகப்படுத்தியுள்ளது. தீமையை எதிர்ப்பது வாழ்வின் முக்கியமான போராட்டமாகும். இயேசு தீமை எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்.

தீமையை திருவிவிலியம் 'கடல்' எனும் அடையாள மொழிமூலம் விளக்குகின்றது. தீமையை மேற் கொள்ளும் போராட்டத்தில் இயேசு முழுமையாக ஈடுபட்டார். தீமை செய்பவரை வெறுக்காமல் அன்பு செலுத்தினார் ( மத்தேயு 5:44). தீமை செய்பவர்களை மனிதாபிமானத்துடன் நோக்கினார் (மத்தேயு 5:22). தீமை செய்பவர்கள் நன்மை செய்ய வேண்டும் என்பதை தெளிவுபடுத்தினார். ( மத்தேயு 7:12). தீய ஆட்சியை வன்மையாக கண்டித்தார் (லூக்கா 13:31, மாற்கு 10:42,43).

தீமையினால் ஏற்படும் சவால்களை எண்ணி விரக்தியடையாமல் தீமையை நன்மைமூலம் சவாலுக்கு உள்ளாக்குவது இயேசுவின் முக்கியமான சிந்தனையாகும். இதன் மூலம் பகைமையை கடந்த ஒரு புதிய உலகம் உருவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க

| தீமையின் செயற்பாடுகள் வேண்டிய | மனுக் குலத்துக்கு ஏற்பட்ட பாதிப்பு | மனுக்குலம் எடுக்க வேண்டிய நடவடிக்கை |
|---|---|---|
| 1 சுயநல ஏற்பாடுகள் | பொது நலம் பேணப்படாமை உதாரணம் : பல மாணவர்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை | சமத்துவத்துடன் பொது நலத்துக்காக செயற்படல் உதாரணம்: வேறு வாளியில் தண்ணீரை விட்டு உரிய நேரத்தில் முகம் கழுவுதல் |
| 2 இலஞ்சம் | | |
| 3 போதைப் பொருள் விற்பனை | | |
| 4 ஒழுங்கீனம் | | |
| 5 வன்முறை | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : இறையாட்சி விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர

**தேர்ச்சி மட்டம் 3.1** : ஏழைகள் கடவுளின் ஆட்சியின் வாரிசுகள் என்பதை ஏற்று வாழ்வர்

**செயற்பாடு 3.1** : ஏழைகளாகி கடவுளுடைய ஆட்சிக்குள் வாழ்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 3.1.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.1.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா
- ஏழைகளின் நிலையை சித்தரிக்கும் படம் (நேரடியாகவோ அல்லது ஒலி ஒளி பேழை மூலம் ஏழைகள் நிலையை பார்க்கலாம்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.1.1**

- இணைப்பு 3.1.1 உள்ள தகவற் கோவையை ஒரிருமுறை வாசிக்க மாணவர்களுக்கு இடமளியுங்கள்.
- ஏழைகளின் நிலையை அவதானித்த மாணவர்களை கருத்துப் பகிர்வில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பின்வருவனவற்றை வலிறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- அடிப்படைத் தேவைகளை உரிய முறையில் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாழ்பவர்களே ஏழைகள்.
- உலகவளங்களை பகிர்ந்து பிறருக்கு கொடுக்காமல் சுய நலமாக வாழ்பவர்களே செல்வர்கள்.
- ஏழைகள் பலர் பட்டினியில் அழுது கொண்டிருக்கும் போது செல்வர்கள் சிலர் மிதமிஞ்சிய நுகர்வாளராய் வாழ்வது தவறு (லூக்கா 6:20-26)
- ஏழைகள் நல்லவாழ்வு பெற நாம் உழைக்க முன்வர வேண்டும்.

(10 நிமிடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.1.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 3.2.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம், எழுது தாள், நிறப்பேனா, ஏழைகளை சித்திரிக்கும்

  படம் என்பனவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

( 30 நிமிடங்கள்)

**படிமுறை 3.1.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை ஒப்படைக்க இடமளியுங்கள்
- குறைநிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- ஏழைகள் அவல நிலையில் வாழ்கின்றனர்.
- ஏழைகளின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுக்க மனுக்குலம் முன்வர வேண்டும்.
- ஏழைகள் கடவுளுடைய ஆட்சிக்குரியவர். செல்வர் செல்ல முடியாது. (மத்தேயு 19:16-30, லூக்கா 16:19-31, 19:1- 10,6:20-26). செல்வர் மனந்திரும்புதல் மூலம் தகுதி பெறலாம்.
- செல்வர் மனம்மாறி தம்மிடம் இருப்பவற்றை பகிர்ந்து ஏழைகள் வாழ உதவி செய்ய முன்வர வேண்டும்.
- ஏழைகளோடு தம்மை அடையாளப்படுத்தி தம்மிடம் இருப்பதை ஏழைகளோடு பகிர்ந்து ஏழைகளின் விடுதலைக்காக உழைக்கும் போது மட்டுமே செல்வர் இறையாட்சிக்குள் செல்லலாம்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. இறையாட்சியின் வாரிசுகள் ஏழைகள் மட்டுமே என்பதை விளக்குவர்
2. ‘செல்வர், ஏழைகளுடன் தம்மிடம் இருப்பதை பகிரவேண்டும்' என உறுதிப்படுத்தி மற்றவர்களுக்கு விளக்குவர்.
3. ஏழைகளுக்கு நல்வாழ்வு கிடைக்க செல்வர் மனம் மாற வேுண்டும் என பிரார்த்தனையொன்றை ஏறெடுப்பர்.
4. ஏழைகளின் நல் வாழ்வுக்காக உழைப்பேன் என தீர்மானித்து சமுகமாக செயற்பட முன்வருவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்

தகவற் கோவை இணைப்பு 3.1.1

கடவுளுடைய சாயலில் படைக்கப்பட்ட மனுக்குலம் சமத்துவமாக வாழ வேண்டும். ஆனால் பெரும்பான்மையான மக்கள் ஏழைகளாக துன்புறுத்தப்படுகின்றனர். சிறுபான்மை செல்வர் பெரும்பாலான வளங்களை தங்கள் வசம் வைத்துக் கொள்கின்றனர். இதனால் ஏழைகள் மனித அவலத்தில் துன்புறுகின்றனர்.

கடவுளுடைய ஆட்சியின் வாரிசுகள் ஏழைகளே (லூக்கா 6:20 ). செல்வர் கடவுளுடைய ( மத்தேயு 19:16−30) ஆட்சிக்குள் செல்ல முடியாது (லூக்கா 6:20−26, 12:13−21 16:19−31, 19:1−10). எனவே செல்வர் தம்மிடம் இருப்பவற்றை ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஏழைகளின் நல்வாழ்வுக்காக மனவிருப்பத்துடன் உழைக்க முன்வர வேண்டும். எழைகளோடு தம்மை ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டும் . ஏழைகளை செல்வர்கள் உரிய முறையில் மதிக்க வேண்டும். ஏழைககள் கட்டாயமாக நல்வாழ்வு பெறவேண்டும். அப்போதுதான் மனுக்குலம் சிறப்பாக வாழும் இறையரசு விண்ணுக்குரியதா, மண்ணுக்குரியதா அல்லது விண்ணையும் மண்ணையும் இணைக்குமொன்றா? மண்ணில் நிகழ்த்தப்படும் தீமையால் விண்ணகம் பாதிப்படைகின்றது. விண்ணகத்தில் சமத்துவம் எனும் விழுமியம் மண்ணில் நிறைவேற விண்ணகம் ஆவலாயுள்ளது.

இறையரசு என்பது இங்குள்ளோரை மேலுலகம் கொண்டு போவதன்று. மாறாக கடவுளின் திருமுன் இருக்கும் பேறு பெறுவதே அவ்வடைவின் நோக்கம். கடவுளோடு இணைந்து உலகை நிர்வகிக்கும் ( Co – Partners in God's reign) பேறாகும் இதன் மறுபக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க

| | இன்றைய சமூகநிலை | கடவுளின் ஆட்சி நிலை | நாம் கூற வேண்டிய செய்தி | எதிர்பார்க்கப்படும் சமூக மாற்றம் | கடவுளின் ஆட்சியில் நிலை |
|---|---|---|---|---|---|
| 1. ஏழை சிறுவன் | ஏழை | வாரிசு | நல்லவராக வாழ வேண்டும் | சிறியளவில் நற்சமுகம் வளரும். | வாரிசு |
| 2. பிறந்த குழந்தை | | | | | |
| 3. உழைக்கும் செல்வர் | | | | | |
| 4. தோட்ட வேலை செய்யும் ஏழை தொழிலாளி | | | | | |
| 5. அகதி இளம் பெண் | | | | | |
| 6. தேயிலைத் தோட்டத் தொழிலாளி | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.2** : அன்பு மைய வாழ்வு வாழ்வர்

**செயற்பாடு 3.2** : அன்பு அடிப்படையில் கடவுளுடைய ஆட்சிக்குள் வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 3.1.2 இலுள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.2.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.2.1**

- இணைப்பு 3.2.1 இலுள்ள தகவற் கோவையை நான்கு வாசித்து விளங்கிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்
- நல்ல சமாரியன் நாடகத்தை (லூக்கா 10:25–37) நடித்த பின்னர் 'அன்பு' பற்றி மாணவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டிய சிந்தனைகளை செவிமடுக்க இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்களை வலிறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

| |
|---|
| • மனுக்குலத்தின் வாழ்வுக்கு முக்கியமான இறையாட்சியின் விழுமியங்களுள் ஒன்று அன்பு என்பது<br>• அன்பு பகைவரிடமும் செலுத்தப்பட வேண்டும் (லூக்கா 6:27–36) என்பது<br>• அன்பு தேவையாயிருப்பவர்களுக்கு உதவி செய்ய முன்வரும் ஒன்றாகும் என்பது (லூக்கா 10:25–37)<br>• நாம் அன்புடன் வாழ வேண்டும் என்பது |

( 15 நிமிடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.2.2**
- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 3.2.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம், எழுது தாள், நிறப்பேனா, ஏழைகளை சித்திரிக்கும் படம் என்பனவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

( 45 நிமிடங்கள்)

**படிமுறை 3.2.3**
- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறைநிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- அன்பு செலுத்தாமல் வாழ்வதனாலேயே மனுக்குலம் துன்புறுகின்றது.
- கடவுளுடைய ஆட்சியின் விழுமியங்கள் / பெறுமதி முக்கியத்துவம் பெற்ற அன்பின் அடிப்படையில் நாம் வாழ வேண்டும்.




- நாம் ஆழமான அன்பு செலுத்துவதன் மூலம் நம் வாழ்விலும் பிறர்வாழ்விலும் சமுகவாழ்விலும் மனிதம் மலர வழி பிறக்கும். ( லூக்கா 10:25-37)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்**

1. 'தன்னில்தானே அன்பு செலுத்தாதவர் தற்கொலை செய்கிறார்' என்பதை விளக்குவர்.
2. 'அன்பு கடவுளின் ஆட்சியை இன்றே நாம் வாழும் இடங்களில் உருவாக்கும்' என்பதை உறுதிப்படுத்தி முன்வைப்பர்.
3. தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்வது அன்புள்ளவர்களின் இயல்பான செயற்பாடு என்பதை கலந்துரையாடி சம்பவங்களுடம் விளக்குவர்
4. அன்பு மைய சமூகம் உருவாக நாம் தனியாளராகவும் சமுகமாகவும் என்ன செய்யலாம் என்பதை தொகுப்பர்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்

**தகவற் கோவை** **இணைப்பு 3.2.1**

கடவுளுடைய ஆட்சியின் விழுமியங்களில் முக்கியமான ஒன்று அன்பாகும். இன்று அன்பு முழுமையாக செலுத்தப்படாமையால் தனிநபர், குடும்பம், சமூகம் போன்ற பல்வேறுபட்ட மட்டங்களிலும் துன்பம் மற்றும் விரக்தி நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒருவர் தன்னிலும், பிறரிலும் கடவுளிலும் தன்நலமற்ற அன்பை பகிர்ந்து கொள்ளும் போது மட்டுமே மனுக்குலம் வாழும். தேவையில் இருப்பவருக்கு அன்புடன் உதவி செய்வது மனிதப்பண்பாகும் (லூக்கா 10:25–37). பகைவரிடமும் அன்பு செலுத்தி உறவை வளர்ப்பது மனுக்குல வாழ்வுக்கு தேவையான ஒன்றாகும். (லூக்கா 6:27) இந்த அடிப்படையில் அன்பு, ஒரு புதிய நன்மை சார்ந்த உலகை இன்றே நாம் வாழும் இடங்களில் உருவாக்கிவிடும்.

எனவே நாம் தன்நலமற்றவர்களாக அன்பின் கருவிகளாக இன்றே வாழ முன்வர வேண்டும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 3.2.2**

பின்வரும் தலைப்புகளில் பேச்சுப் போட்டி நடத்துக

குழு 1 : அன்பு, தேவையிலிருப்போருக்கு உதவும் போது வெளிப்படும்

குழு 2 : அன்பு கடவுளோடும் மனுக்குலத்துடனும் ஒருவர் வைத்திருக்கும் தொடர்பை வெளிப்படுத்தும்

குழு 3 : அன்பு தன்நலம் சாராது, அதேபோல் தற்கொலையை அங்கீகரிக்காது

குழு 4 : அன்பு செலுத்தப்படாது ஒதுக்கப்படுகின்றவர்கள் ஏழைகளிலும் ஏழைகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.3** : மன்னிப்பு மைய வாழ்வு வாழ்வர்

**செயற்பாடு 3.3** : மன்னிப்பின் அடிப்படையில் கடவுளுடைய ஆட்சிக்குள் வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 3.3.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.3.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.3.1**

- இணைப்பு 3.3.1 இலுள்ள தகவற் கோவையை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்
- இயேசு கற்பித்த மன்றாட்டை இணைந்து கூறிவிட்டு மன்னிப்பின் அழுத்தம் பற்றி பகிர்ந்து கொள்ள வாய்ப்பு வழங்குங்கள் (மத்தேயு 6:12 லூக்கா 11:4)
- பின்வருவனவற்றை வலிறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

| |
|---|
| • மனுக்குலத்தின் வாழ்வுக்கு முக்கியமான இறையாட்சியின் விழுமியங்களுள் ஒன்று மன்னிப்பு என்பது<br>• அறியாமையினால் தவறு செய்தோரை மன்னித்து திருத்த வேண்டும் (லூக்கா 23:32-34).<br>• மனம் மாறியவருக்கு மன்னிப்பு வரையறைக்கப்படாது. (லூக்கா 17:3.4) என்பது<br>• இறை மன்னிப்பை வேண்டுவோர் பிறரை ஏற்கனவே மன்னித்திருக்க வேண்டும். மத்தேயு 18:23-35) மத்தேயு 6:12 லூக்கா 11:4)<br>• நாம் மன்னிக்க முன்வர வேண்டும். |

( 15 நிமிடம்)

**படிமுறை 3.3.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 3.2.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம், எழுது தாள், நிறப்பேனா, என்பனவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

( 45 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.3.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை ஒப்படைக்க இடமளியுங்கள்
- குறைநிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

| |
|---|
| • மன்னிப்பு இல்லாமல் வாழ்க்கையே இல்லை |
| • மன்னிக்க மறுப்பது இன்றைய சீரழிவுக்கு காரணம். |
| • மன்னிப்பு மிகவும் முக்கியமானது என்பது |
| • அறியாமையில் தவறிழைத்தவருக்கு திருந்த ஒரு வாய்ப்பு. |
| • மன்னிப்பு பெற விரும்புவர் மன்னிப்பு வழங்கவும் தயாராக இருக்க வேண்டும். |
| • மன்னிப்பு வரையறைகளுக்கு அப்பாற்பட்டது. |
| • மன்னிப்பு மூலம் நல்மனம் கொண்ட சமுதாயத்தை நாம் உருவாக்கலாம். |

(60 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்**

1. மன்னிப்பு தவறு இழைத்தவர்கள் திருந்தி வாழத் தரப்படும் ஒரு புதிய வாய்ப்பாகும் என்பதை விளக்குவர்.
2. மன்னிப்பு வரையறைகளைக் கடந்தது, மனம் மாறியவரை மன்னிக்க முன்வர வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவர்.
3. மன்னிப்பு பெறவும் மன்னிப்பு வழங்கவும் தீர்மானம் எடுத்து பிறருடன் பகிர்வர்
4. இயேசு கற்பித்த மன்றாட்டைப் பொருத்தமான முறையில் மன்னிப்பு சார்ந்த அழுத்தம் கொடுத்து ஏறெடுப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்

**தகவற் கோவை** **இணைப்பு 3.3.1**

கடவுளுடைய ஆட்சியின் விழுமியங்களில் முக்கியமான ஒன்று மன்னிப்பு ஆகும். மன்னிக்க தனியாட்களும் சமூகமும் தயங்குகின்றன. மன்னிப்பைப் பெற வேண்டும் என மட்டும் விரும்புகின்றது. இதனால் பல்வேறுபட்ட பகைமை, துன்பம், விரக்தி நமது சமுகத்தில் நிலவுகின்றது.

இயேசு மன்னிக்கும் பண்பை தனது வாழ்க்கையாக்கினார். அறியாமையினால் தவறிழைத்ததோரை மன்னித்தார் (லூக்கா 23:32–34). மன்னிப்பு பெறுவது மட்டுமல்ல மன்னிப்பு வழங்குவதும் முக்கியம் என்றார் ( மத்தேயு 18:21–35). கடவுளிடம் மன்னிப்பு கேட்கும் முன்னர் பிறரின் தவறுகளை மன்னித்து விட்டோம் என அறிக்கையையும் விண்ணுலகத்திலிருக்கிற தந்தையே....... எனும் குடும்பம் மன்றாட்டையும் இயேசு கற்பித்தார். மனம் மாறியவர்களுக்கு வரையறை கடந்த அளவு மன்னிக்க நாம் தயாராக வேண்டும் எனவும் கற்பித்தர். நாம் மன்னிக்கும் சமுகத்தை உருவாக்க செயற்பட வேண்டும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 3.3.2**

பின்வரும் தலைப்புகளில் குழுக்களிடையே விவாதம் நடத்துக

மன்னிப்பு மனம்மாறிய நற்சமூகத்தை உருவாக்க செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர் |
| **தேர்ச்சி மட்டம் 3.4** | : | பணியாளர் தலைமைத்துவ பண்புடைய வாழ்வு வாழ்வர். |
| **செயற்பாடு 3.4** | : | பணியாளர் தலைமைத்துவ பண்பு மைய வாழ்வு வாழ்வோம். |
| **நேரம்** | : | 120 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 3.4.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.4.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.4.1**

- இணைப்பு 3.4.1 உள்ள தகவற் கோவையை வாசித்து விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்
- யோவான் 13:1−20 நாடகவடிவில் நடிக்க வாய்ப்பு வழங்குங்கள்.
- நாடகம் மூலம் மாணவர்கள் பெற்றுக் கொண்ட சிந்தனைகளை பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

> - பணியாளர்கள் தலைமைத்துவம் வித்தியாசமானது என்பது
> - பணியாளர் தலைமைத்துவ முன்மாதிரி நமது சமுதாயத்தை கடவுளுடைய ஆட்சிக்கு ஏற்றதாக்கும். (யோவான் 13:1−20).
> - பணியாளர் தலைமைத்துவம் பணியை மையப்படுத்துகின்றது என்பது .
> - நாம் பணியாற்றும் தலைமைத்துவத்தை பின்பற்ற வேண்டும்.

**படிமுறை 3.4.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 3.4.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம் எழுது தாள் நிறப்பேனா, என்பனவற்றை வழங்குங்கள்.
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.4.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறைநிரைப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- பணியாளர் தலைமைத்துவத்தையும் அதிகாரத்தையும் முக்கியத்துவப்படுத்தாமல் பணியை முக்கியத்துவப்படுத்த வேண்டும் என்பது.
- தொண்டை எதிர்பார்ப்பதை விட தொண்டு புரிவதே இயேசுவின் சீடத்துவம் என்பது.
- அதிகாரமையம் கொண்ட இன்றைய தலைமைத்துவத்துக்கு பணியாளர்கள் தலைமைத்துவம் சவாலாக உள்ளது என்பது.
- நாம் பணியாற்றும் தலைமைத்துவ பண்பு கொண்ட இயேசு போல வாழும் போது நிச்சயம் நல்ல சமுதாயம் உருவாகும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. 'பணியாளர்கள் தலைமைத்துவம்' பற்றி விளக்குவர்
2. 'இயேசுவின் தலைமைத்துவம் பணியாளர் தலைமைத்துவ மாதிரியுயையுடையது' என கலந்துரையாடி முன் வைப்பார்.
3. பணியாளர் தலைமைத்துவம் எதிர் கொள்ளும் இன்றைய சவால்களை பட்டியலிடுவர்
4. பணியாளர் தலைமைத்துவம் இன்றைய அதிகாரமைய தலைமைத்துவத்திற்கு விடுவிக்கும் சவால்களைப் பட்டியலிடுவார்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்

**தகவற் கோவை** **இணைப்பு 3.4.1**

கடவுளுடைய ஆட்சியின் விழுமியங்களை மையப்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரி பணியாளர் தலைமைத்துவமாகும்

யூத அடிமை வீட்டுக்கு விருந்துக்கு வருவோரின் பாதங்களைக் கழுவது போல இயேசு தனது சீடர்களின் பாதங்களைக் கழுவினார். பணிக்கு அதிக முக்கியத்துவத்தை பணியாளர் தலைமைத்துவ மாதிரி வழங்குகின்றது. இதனால் அதிகாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இன்றைய தலைமைத்துவத்துக்கு இது பெரிய சவாலாகவுள்ளது. தொண்டு ஏற்பதிலும் தொண்டு ஆற்றுவதற்கே மிகவும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

எனவே நாம் பணியாளர் தலைமைத்துவ மாதிரியை பின்பற்றும் போது நிச்சயம் ஒரு நல்ல சமுகத்தை நாம் வாழும் இடங்களில் காணலாம்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 3.4.2**

பின்வரும் தலைப்பில் விவாதம் நடத்துக

அதிகார தலைமைத்துவமா பணியாளர்கள் தலைமைத்துவமா இன்றைய சமுகத்திற்கு சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.5** : கைம்மாறு எதிர்பாரா பண்புடைய வாழ்வு வாழ்வர்.

**செயற்பாடு 3.5** : கைம்மாறு எதிர்பார பண்புமைய வாழ்வு வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 3.5.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.5.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.5.1**

- இணைப்பு 3.5.1 இலுள்ள தகவற் கோவையை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்
- கைம்மாறு எதிர்பார்ப்பு அற்ற ஒரு விருந்தை எப்படி ஏற்பாடு செய்யலாம் என்று நாடகமொன்றை நடித்து விட்டு கருத்துக்களை பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள் (லூக்கா 14:7−14:7−14)
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

| |
|---|
| • பிரதிபலன் எதிர்பார்க்காமல் எதையும் செய்வதே சிறந்தது என்பது<br>• விருந்தில் முதன்மை ஆசனத்தை எதிர்பார்க்கக் கூடாது (லூக்கா 14:7−14)<br>• விருந்துக்கு அழைக்கப்படுவோர் திரும்பவும் பெரும் விருந்து வைக்க முடியாத நிலையிலுள்ளவர்களாக இருக்கட்டும் என்பது (லூக் 14:12−14) : ஏழைகள், ஊடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர்.<br>• நாம் கைம்மாறு எதிர்பாராது நல்ல செயல்களில் ஈடுபட வேண்டும் என்பது |

(15 நிமிடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.5.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 3.5.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம் எழுது தாள் நிறப்பேனா, என்பனவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

**படிமுறை 3.5.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறைநிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - கைம்மாறு செய்ய முடியாத நிலையிலுள்ள வழியோரங்களிலும் நடைபாதைகளிலும் இருந்து வந்தோரே இறையாட்சியின் (பெரியவிருந்தின்) விருந்தினர் என்பது. (லூக்கா 14:15-24).
>
> - ஒருவரை உரிய முறையில் அங்கீகரிப்பவர் நிச்சயம் உரிய கைம்மாறு பெறுவர். இறைவாக்கினர், நேர்மையாளர், சீடர் (மத்தேயு 10:40-42)
>
> - எந்த எதிர்பார்ப்புமின்றி செயற்படுவோர் கடவுளின் ஆட்சியில் நற்பலன் பெறுவர்.
>
> - நாம் எந்தவித கைம்மாறும் எதிர்பார்க்காமல் இறையாட்சியின் விழுமியங்களை விதைக்கும் பணியில் ஈடுபடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. கைம்மாறு எதிர்பார்ப்பற்ற பண்பு மைய வாழ்வு பற்றி விளக்குவர்.
2. கைம்மாறு எதிர்பார்ப்பு அற்றவர் எத்தகைய செயல்களில் ஈடுபடுவர் யாரை பங்குபற்றுவதற்கு அழைப்பர். என கலந்துரையாடி பகிர்ந்து கொள்வர்.
3. கைம்மாறு எதிர்பார்பின்றி செயற்படுவேன் என தீர்மானம் எடுத்து காரணங்களை மற்றவர்களுக்கு விளக்குவர்.
4. கைம்மாறு எதிர்பார்பற்ற சிலரின் வாழ்க்கை வரலாற்றை தேடி சேகரிப்பர்

உதாரணம் 1. மியூரியல் வரட்சின் கருணா நிலையம்,–கிளி நொச்சி
2. ஈவ்லின் கார்ணி – பிரீத்தி நிவச (தலாவ)

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்

**தகவற் கோவை** **இணைப்பு 3.5.1**

கைம்மாறு எதிர்பார்க்காதவர்களை இன்றைய சமுகத்தில் சந்திப்பது மிகவும் அரிது. எந்த எதிர்பார்ப்புமின்றி பணியாற்றுவோர் பேறு பெற்றோர்.

விருந்துகள் கூட திரும்பவும் ஒரு விருந்தின் மூலம் கைம்மாறு செய்யப்படும் வியாபாரமாகி விட்டது. எனவே இயேசு, ஏழைகளையும் ஊனமுற்றோரையும் விருந்திற்கு அழைக்கும்படி அறிவுரை கூறினார். அழைப்பை நிராகரிப்போரை விட்டு விட்டு அழைப்பே கிடைக்காதோரை, அழைப்பு கிடைக்கும் என எதிர்பார்க்காதோரை இறையாட்சியின் விருந்துக்கு அழைப்பதாக இயேசு தெளிவுபடுத்தினார் (லூக்கா 14:7–23). நாம் கைம்மாறு எதிர்பார்க்காமல் பணியாற்றும் போது கடவுள் உரிய கைம்மாறு அளிக்கின்றார் (மத்தேயு 10:40–42).

எனவே கைம்மாறு எதிர்பார்ப்பின்றி இறையாட்சிக்காக நாம் வாழும் போது நிச்சயம் எதிர்பார்ப்புக்களை கடந்த நிலையில் நற்சமூகம் தோன்றும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 3.5.2**

பின்வரும் தலைப்புகளில் விவாதம் நடத்துக

எதிர்பார்ப்பின்றி கடவுளுடைய ஆட்சிக்காக உழைப்பது சிறந்தது.

எதிர்பார்ப்புகளோடு கடவுளுடைய ஆட்சிக்காக உழைப்பது சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.6** : 'நற்பயன் கொடுக்கும்' பண்பு மைய வாழ்வு வாழ்வர்.

**செயற்பாடு 3.6** : 'நற்பயன் கொடுக்கும்' பண்பு மைய வாழ்வு வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 3.6.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.6.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.6.1**

- இணைப்பு 3.6.1 உள்ள தகவற் கோவையை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்
- 'நற்பயன் கொடுத்தல்' என்றால் என்ன வென மாணவர்களை பகிர்ந்து கொள்ள வாய்ப்பு அளியுங்கள்
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

> - நற்பயன் கொடுப்பது மனுக்குலம் வாழத் தேவையானது.
> - பலர் நற்பயன் கொடுக்காமையே மனுக்குலத்தின் அழிவுக்கு காரணம்.
> - நற்பயன் கொடுக்கும் தன்மையுடையவர்களாக இருக்கும்போது மட்டுமே நற்பயன் கொடுக்க முடியும்.
> - நாம் நற்பயன் கொடுப்போராக மாறி கடவுளின் ஆட்சிக்காக உழைக்க வேண்டும்.

**படிமுறை 3.6.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 3.6.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம், எழுது தாள், நிறப்பேனா என்பனவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.6.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை ஒப்படைக்க இடமளியுங்கள்
- குறைநிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்பட்ட கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - நற்பயன் கொடுப்பது மனித பண்பு.
> - நற்பயன் கொடுக்கம் தன்மை கொண்டோராக மாற வேண்டும். நற்பயன் தரும் வாழ்க்கை மூலமே சான்று பகர வேண்டும் (லூக்கா 13:8).
> - நற்பயன் வழங்கும் தன்மை கொண்டோராக மாற சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது (லூக்கா 13:9).
> - நற்பயன் கொடுப்போரால் மட்டுமே இறையாட்சிக்குள் செல்லமுடியும் (லூக்கா 6:43−45).
> - நாம் முழுமையாக நற்பயன் வழங்குவோராக வாழ வேண்டும்.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. 'நற்பயன் கொடுப்போர் நற் செயல்களால் புரிந்து கொள்ளப்படுவர்' என்பதை விளக்குவர்.
2. 'நற்பயன் மூலம் மட்டுமே மனுக்குலம் வளர்ச்சியுறும்' என தீர்மானித்து பிறருக்கு கூறுவர்.
3. நற்பயன் வாழங்காமையால் மனுக்குலத்துக்கு எந்த பிரேயோசனமும் இல்லை என பிறருடன் கலந்துரையாடி கருத்துக்களை சேகரிப்பார்.
4. நற்பயன் கொடுப்பதால் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம் என குழுவாக தீர்மானத்தை எடுத்து பிறருக்கு கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்

**தகவற் கோவை** **இணைப்பு 3.6.1**

நற்பயன் கொடுக்கும் தனிப்பட்டோரும் சமூகங்களுமே மனுக்குலத்தின் நல் வாழ்வுக்கு காரணங்கள் ஆகும். நற்பயன் கொடுக்காமல் தன்சுயநலத்துடன் தீமையை செய்வோரால் மனுக்குலம் அன்றாடம் வேதனையடைகின்றது. தீயவை பகிரப்படுவதால் தீமை நிறைந்த சமூகம் உருவாகி மனுக்குலம் ஒடுக்கப்படுகின்றது.

நற்பயன் கொடுக்கும் நல்லவர்கள் இன்றைய அவசரத் தேவையாகும். நற்பயன் வழங்கும் தனிப்பட்டோரும் சமூகமும் மனுக்குலத்தின் வாழ்வை உறுதிபடுத்துகின்றனர். நற்பயன் வழங்கும் தன்மையுடையவராக தனிப்பட்டோரும் சமூகமும் மாற வேண்டும். இந்த மாற்றம் ஏற்பட சந்தர்ப்பமும் வழங்கப்படுகின்றது. (லூக் 13:9). அத்துடன் நற்பலன் தருவோர் என தனிப்பட்டோரையும் சமூகத்தையும் வாழ்க்கை முறை மூலம் மட்டுமே நாம் புரிந்து கொள்ள முடியும். (லூக்கா 3:8).

நற்பயன் கொடுப்பதால் மட்டுமே மனுக்குலம் தொடர்ந்தும் தனது இருப்பை தக்க வைத்திருக்க முடியும் (லூக்கா 6:43–45). அதற்கு நாம் அனைவரும் விரும்பி செயற்பட முன்வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 3.6.2**

பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க

| **செயற்பாடு** | **தீய விளைவு** | **எடுக்கவேண்டிய நடவடிக்கை** | **விளைவு** | **நற்பயன்தரும் சமூகமாற்றம்.** |
|---|---|---|---|---|
| 1. மதித்து வாழாமை | உறவு சீர்குலைவு | மதித்து வாழச் செய்ய முன்வர வேணடும் | நல்லுறவு ஏற்படும் | நற்பயன் தரும் உறவு கொண்ட சமூகம் உருவாகும். |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.7** : சிறுவர்களுக்கு உரிய இடம் வழங்கும் வாழ்வை வாழ்வர்

**செயற்பாடு 3.7** : சிறுவர்களுக்கு உரிய இடத்தை வழங்கும் நல்வாழ்வை வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 3.7.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.7.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவலியம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.7.1**

- இணைப்பு 3.7.1 உள்ள தகவற் கோவையை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்
- சிறுவர் எப்படி வாழ வேண்டும் என்பது பற்றி தம் எண்ணங்களை வெளிப்படுத்தப் மாணவர்களுக்கு இடமளியுங்கள்.
  என்றால் என்ன என மாணவர்களை பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வருவனவற்றை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

- சிறுவரை ஒடுக்கும் சமுதாயத்தில் வாழ்கின்றோம் என்பது.
  உதாரணம்: கட்டாய வேலை, மனிதராக மதிக்காமை, துன்புறுத்தல், அடித்தல்.
- சிறுவர் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டுள்ள கடவுளின் மக்கள்.
- கடவுளின் விழுமயங்களோடு அல்லது மனிதப் பண்புகளோடு சிறுவர்களை வாழ விடவேண்டும். என்பது
- சிறுவர்களை மதிக்கும் சமுதாயமாக நம் சமுதாயம் மாற நாம் செயற்பட வேண்டும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.7.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 3.7.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம் எழுது தாள் நிறப்பேனா, என்பனவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படிமுறை 3.7.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை ஒப்படைக்க இடமளியுங்கள்
- குறைநிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- மனித நேயமற்ற முறையில் சிறுவர் நடத்தப்படுகின்றனர்.
- இறையாட்சியின் வாரிசுகள் சிறுவரே.
  - சிறுவர் கடவுளையும் பெரியவர்களையும் சார்ந்து வாழ்பவர்கள் (மத்தேயு 18:1–5).
  - சிறுவருக்கு முன்னுரிமை கொடுக்காத நிலையை எண்ணி இயேசு கோபம் கொள்கிறார் (மாற்கு 10:13–16)
- சிறுவர் உரிமைகள் பொறுப்புக்கள் பற்றி இன்றைய சமூகத்தில் சிறப்பாக பெற்றோரும் சிறுவரும் விழிப்புணர்வு பெற வேண்டும்.
- சிறுவரின் நல்வாழ்வுக்காக செயற்பட வேண்டும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. சிறுவர் கடவுளின் ஆட்சியின் வாரிசுகள் என்பதை விளக்குவர்.
2. கடவுளில் தங்கி வாழ்வோரே கடவுளின் மக்கள் என்பதற்கு சிறுவரே பொருத்தமான உதாரணம் என்பதை கலந்துரையாடி உறுதிப்படுத்துங்கள்
3. சிறுவருக்கு ஏற்படும் பாதிப்பை சம்பவங்களுடன் வரிசையாகத் தொகுப்பர்.
4. நாளாந்த பத்திரிகையிலிருந்து சிறுவர் உரிமை மீறல் தொடர்பாகவும் நாம் மேற் கொள்ள வேண்டிய நடிவடிக்கை தொடர்பாகவும் செய்திகளை வெட்டிச் சேகரிப்பர்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்பிக்க தயாராகுங்கள்

**தகவற் கோவை** **இணைப்பு 3.7.1**

சிறுவர்கள் எமது சமுதாயத்தில் ஒடுக்கப்படுகின்றார்கள். சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதில்லை. அவர்களது அடையாளம் முக்கியப்படுத்தப்படுவதில்லை. பெரியவர்களின் விருப்பதையும் கட்டளைகளையும் நிறைவேற்றும் வேலையாட்களாகவே சிறுவர்கள் பாவிக்கப்படுகின்றனர்.

சிறுவர்களே கடவுளுடைய ஆட்சியின் வாரிசுகள். அவர்களை மனித நேயத்துடனும் மனித உரிமைகளுடனும் வாழ விடுவது பெரியவர்களின் கடமையாகும். சிறுவர்களிடமிருந்து நற்பண்புகளை பெரியவர்கள் படித்துக் கொள்ள வேண்டும் (உதாரணம் : சிறுவர்கள் போல பெரியவர்கள் மாறி கடவுளில் தங்கி வாழ பழகிக் கொள்ள வேண்டும்). சிறுவர்களில் பெற்றோர் ஆசிரியர்.... அன்பு செலுத்தி அவர்களை மதிக்க வேண்டும். இன்றைய சமூகம் வாழ்வதற்கும், திருத்துவத்திற்கும் நல்ல சிறுவர்கள் மிகவும் தேவை.

சிறுவர்கள் நல்ல மனப்பான்மையுடன் வாழ வேண்டும். சுயநலம், ஒருவரை ஒருவர் தாக்குதல், ஒருவரை ஒருவர் அவமானப்படுத்தல்...... போன்ற தீய பண்புகளை கைவிட்டு நல்ல மனப்பான்மையுடன் வாழ முன்வர வேண்டும். இன்றைய குழப்பம் நிறைந்த இலங்கையை நல்லதாக மாற்றும் அங்காக பாடசாலைகளும், முக்கியமாக அங்குள்ள சிறுவர்களும், செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 3.7.2**

பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க

| சிறுவர்களின் உரிமைகள் | ஏற்படும் சிக்கல்கள் | மாற்று நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1. கல்வி<br>2.<br>3.<br>4.<br>5. | கட்டாய வேலை | கல்வி கற்பதற்கு உரிய ஒழுங்குகளை மேற் கொள்ள சிறுவர் வேலைக்கு செல்லாமல் அக்குடும்பம் வாழக் கூடிய நிலையை ஏற்படுத்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.8** : பெண்களுக்குரிய இடம் வழங்கும் வாழ்வை வாழ்வர்

**செயற்பாடு 3.8** : பெண்களுக்கு உரிய இடத்தை வழங்கும் நல்வாழ்வை வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

**எடிமுறை 3.8.1**
- இணைப்பு 3.8.1 இலுள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.8.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

- இணைப்பு 3.8.1 இலுள்ள தகவற் கோவையை நன்கு வாசித்துக் விளங்கிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்பது பற்றி மாணவர்கள் தம் சிந்தனைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- பெண்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர் என்பது.
- பெண்கள் உரிமைகளுடன் உரிய முறையில் வாழ அவர்களை ஏற்று மனுக்குலம் முன்வர இடமளிக்க வேண்டும் என்பது
- இயேசு பெண்களுக்கு உரிய இடத்தை வழங்கினர் என்பது
- எமது ஆணாதிக்க சமூகத்தில் நாமும் உரிய இடத்தை வழங்கிப் பெண்களை மதிக்க முன்வர வேண்டும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.8.2**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களுக்கு இணைப்பு 3.8.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம், திருவிவிலியம், எழுது கடதாசி, நிறப்பேனா, படம் என்பனவற்றை வழங்குங்கள்.
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படிமுறை 3.8.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்.
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆரோக்கியமான விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்.
- கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- பெண்களும் ஆண்களைப்போல கடவுளின் சாயலில் படைக்கப்பட்டோர் என்பது (தொடக்க நூல் 1:26,27)
- பெண்கள் குடும்பங்களிலும் , பாடசாலைகளிலும் வேலைத்தளங்களிலும் சமுதாயத்திலும் ஒடுக்கப்படுகின்றனர் என்பது
- பெண்களுக்கு உரிய இடம் கொடுக்க வேண்டும் என்பது

  லூக்கா 10:38–42 – மார்த்தா, மரியா
  லூக்கா 8:1–3 – பெண் சீடர்கள்
  உரோமையர் 16:1 – பெண் திருத்தொண்டர், பெண்களுக்கான மனித உரிமைகள் சட்டங்கள்
- மனுக்குலம் மேம்பாடடைய பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. பெண்கள் மீது திணிக்கப்படும் ஒடுக்குமுறைகளைப் பெயரிடுவர்
2. பெண்களை மனித நேயத்துடன் வாழச் செய்வது மனுக்குலத்தின் பொறுப்பு என ஒடுக்கப்பட்ட பெண்களோடு கலந்துரையாடி விளக்குவர்.
3. பெண்கள் பொறுப்போடு மனுக்குல மேம்பாட்டுக்காக தமது பங்கை ஆற்ற வேண்டும் எனக் கூறுவர்.
4. மனித மேம்பாட்டுக்கு பெண்கள் ஆற்றும் பங்கைத் தேடி சேகரிப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்.
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்பிக்க தயாராகுங்கள்.

**தகவற் கோவை** **இணைப்பு 3.8.1**

மனுக்குலத்தின் இருப்புக்கு பெண்களின் பங்கு மிகவும் முக்கியமானது . எனினும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் குடும்பங்கள், பாடசாலை, வேலைத்தளங்கள் சமூகம் போன்ற பல்வேறுமட்டங்களிலும் பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர்.

கடவுளுடைய ஆட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் . இயேசு பெண்சீடர்களைக் கொண்டிருந்தார்.(லூக்கா 8:38-42) மனித உரிமைகள் சட்டங்களும் பெண்களை நாம் மதிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றன.

நாம் பெண்களுக்கு உரிய இடம் கொடுக்கும் போது மட்டுமே மனுக்குலமாக வாழலாம்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 3.8.2**

பின்வரும் தலைப்பில் குழுக்களிடையே விவாதியுங்கள்.
மனுக்குல மேம்பாட்டுக்கு பெண்களே காரணம்.
மனுக்குல அழிவுக்கு பெண்களே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.9** : 'பாவிகள்' என கருதப்பட்டோருக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்வோம்.

**செயற்பாடு 3.9** : 'பாவிகள்' என கருதப்படுவோருக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 3.9.1 இலுள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.9.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.9.1**

- இணைப்பு 3.9.1 இலுள்ள தகவற் கோவையை அனைவரும் நன்கு வாசித்துக் விளங்கிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்
- இயேசுவின் காலத்தில் 'பாவிகள்' என கருதப்பட்டோர் தொடர்பாக மாணவர்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

| |
|---|
| • இயேசுவின் காலத்தில் பாவிகள் என பிரிக்கப்பட்டோர் வரி தண்டுபவர்கள் போன்றவர்களே என்பது |
| • யூத தலைவர்கள் பாவிகளை உரிய மதிப்புடன் நடத்தவில்லை சமூகத்தில் மதிக்கப்படாத பாவிகளை இயேசு அன்பு கூர்ந்தார் என்பது |
| • நாமும் மதிக்கப்படாத மக்களுடன் வாழ வேண்டும் என்பது. |

**படிமுறை 3.9.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 3.9.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம் திருவிவிலியம், எழுது கடதாசி, நிறப்பேனா என்பனவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

( 45 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.9.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்ப்பிக்க இடமளியுங்கள்
- குறைநிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- ஆரோக்கியமான விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - இயேசு எந்த வேறுபாடுமின்றி மனுக்குலத்தை அன்பு செய்கிறார் என்பது
> - யூத சமுகம் மதிக்காத பாவிகளை இயேசு உரிய மதிப்பளித்து அணுகினார் என்பது (லூக்கா 5:27-32)
> - யூத தலைவர்கள் மதிக்காத லேவியை இயேசு தனது சீடராக அழைத்தார் என்பது (லூக் 5:28,29)
> - மதிப்பளிக்கப்படாத மக்களுடன் இயேசு தன்னை அடையாளம் காட்டினார் என்பது (லூக்கா 5:30)
> - தேவையிலிருக்கும் மனித அவமதிப்புக்குள்ளான வர்களுடன் இயேசு தன் பனியை இணைத்துக் கொண்டது போல நாமும் சமுதாயத்தை மாற்ற வேண்டும் என்பது.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ‘பாவிகள்’ என்பதை விளக்குவர்
- யூத தலைவர்கள் மதிக்காதவர்களை இயேசு மதித்தார் என்பதை விவிலிய உதாரணங்களுடன் மற்றவர்களுக்கு கூறுவர்.
- எமது சமூதாயத்தில் மதிக்கப்படாதவர்களை அடையாளம் காண்பர்
- சமுதாயத் தலைவர்கள், மதிக்காதவர்களுக்கு மதிப்புக் கொடுத்து மனித நேயத்துடன் வாழச் செய்வதே கிறிஸ்தவ பணி என்பதை சில சம்பவங்களுடன் விளக்கி தொகுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்பிக்க தயாராகுங்கள்

### தகவற் கோவை — இணைப்பு 3.9.1

யூத சமுதாயத்தில் பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர், எசீனியர் .... என பல பிரிவுகள் காணப்பட்டன. யூத தலைவர்கள் முக்கியமாக வரிவாங்குவோர் போன்றவர்களை பாவிகள் என மதிப்பின்றி நடத்தினர்.

இயேசு சமுதாயத்தில் 'பாவிகள்' என கூறி மதிப்பற்றவர்களாகக் கருதப்பட்டவர்களுக்கு மதிப்பளித்தார்; தனது சீடராகவும் தெரிந்து கொண்டார் (லூக்கா 5: 27-32).

எமது சமுதாயத்திலும் யார் மதிப்பின்றி நடத்தப்படுகின்றனரோ அவர்களின் விடிவுக்காக உழைப்பதே எமது கடமையாகும்.

### செயற்பாட்டுப்படிவம் — இணைப்பு 3.9.2

பாவிகள் பற்றிய பின்வருவோரின் எண்ணங்களை விவிலிய அடிப்படையில் பாவித்து அட்டவணையை பூர்த்தி செய்க

| பாவிகள் | யூதத் தலைவர்கள், பரிசேயர், மறைநூல் அறிஞர் | இயேசு |
|---|---|---|
| 01. லூக்கா 5:27-32 | ஏற்றுக் கொள்ளாமை | உணவு அருந்தி மதிப்பளித்தல் |
| 02. லூக் 18 : 9 - 14 | | |
| 03. லூக் 7:36-50 | | |
| 04. லூக் 15 | | |
| 05. லூக் 19:1-10 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.10** : சமூகத்தில் ஒதுக்கப்பட்வர்களுக்கு உரிய இடம் வழங்கும் வாழ்வை வாழ்வர்

**செயற்பாடு 3.10** : சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கு உரிய இடத்தை வழங்கும் நல்வாழ்வை வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 3.10.1 இலுள்ள தகவற் கோவை
- இணைப்பு 3.10.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.10.1**
- இணைப்பு 3.10.1 இலுள்ள தகவற் கோவையை நன்கு வாசித்துக் விளங்கிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்
- சமுதாயத்தில் ஒதுக்கபட்வர்கள் தொடர்பாக மாணவர்கள் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

- யூத சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களின் நிலை மிகவும் வேதனைக்குரியது என்பது.
- இயேசு ஒதுக்கப்பட்வர்களின் விடிவுக்காக செயற்பட்டார் என்பது
  உதாரணம்:- தொழு நோயாளரை தொட்டு சுகமாக்கினார் (லூக்கா 5:12-16)
- நாமும் எமது சமுதாயத்தில் வாழும் ஒதுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக உழைக்க முன்வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிமுறை 3.10.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 3.10.2 இலுள்ள செயற்பாட்டுப்படி திருவிவிலியம், எழுது கடதாசி, நிறப்பேனா என்பனவற்ை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

**படிமுறை 3.10.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்க
- குறைநிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- ஆரோக்கியமான விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனை குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- யூத சமுதாயத்தில் ஒரு தொழு நோயாளி ஒதுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்டார் என்பது ( லேவியர் 13:14)

  குடும்பத்திலிருந்து தனிமைப்படுத்தப்படுத்தப்பட்டார்

  சமுதாயத்திடமிருந்து தனிப்படுத்தப்பட்டார்.

  ஆலயத்திடமிருந்து தனிப்படத்தப்பட்டார். லேவியர் 13:46
- இயேசு ஒதுக்கப்பட்ட தொழு நோயாளி போன்றோருக்கு முழுமையான விடுதலையை கொடுத்தார் என்பது

  குடும்பத்துடன் உறவு

  சமுதாயத்துடன் உறவு

  ஆலய சமுகத்துடன் உறவு லூக்கா 5:12-16
- நாமும் முழு மனிதவிடுதலையை ஒதுக்கப்பட்டோருக்கு வழங்க முன்வர வேண்டும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- தொழுநோயாளியின் நிலையை யூத நீதிச்சட்டத்தின் பின்னனியில் கூறுவர் (லேவியர் 13:14)
- தொழி நோயாளி ஒதுக்கப்பட்ட ஒருவர் என்பதை விளக்குவர்.
- இயேசு தொழு நோயாளிகளுக்கு எப்படி முழு விடுதலையை வழங்கினார் என்பதை விவிலிய உதாரணங்களை சேகரித்து விளக்குவர்.
- ஒதுக்கப்பட்ட மக்களை இன்றைய சமுகத்தில் அடையாளம் கண்டு நாம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானித்து பிறருக்கு கூறுவர்
- உதாரணம் (1) எய்ட்ஸ் நோயாளிகள்
  (2) இன, மத, மொழி, சாதி, பால் ரீதியில் ஒதுக்கப்பட்டோர்

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்பிக்க தயாராகுங்கள்

**தகவற் கோவை** **இணைப்பு 3.10.1**

யூத சமுதாயம் தொழு நோயாளர் போன்றவர்களை ஒதுக்கி வைத்திருந்தது. ஒருவருக்கு தொழுநோய் ஏற்பட்டவுடன் அவர் குடும்பம், சமுதாயம், ஆலயம் எனும் உறவுளிலிருந்து பிரிக்கப்பட்டு தனிமைபடுத்தப்பட்டார்.

இயேசு தொழுநோய் போன்ற ஒதுக்கப்பட்ட மக்களில் அன்பு செலுத்தினார். தொழுநோயாளர்களை சுகமாக்கி (லூக்கா 5:12-16) முறிந்திருந்த உறவுகளை தொடர்புபடுத்தினார். தொழுநோய் சுகத்துடன் முழுமையான குடும்பம் சமூகம் ஆலயம் சார்ந்த, ஆரோக்கிய நிலையை ஏற்படுத்தினார். எனவே இயேசுவின் சுகமாக்கல் தனிப்பட்டவரின் வாழ்வைக் கடந்த, சமூக சுகமாக்கலாக கருதப்பட வேண்டும்.

இன்றும் எமது சமுதாயத்தில் பலர் இனம், மதம், மொழி , சிந்தனைகள்....... எனும் பல்வேறுபட்ட வகைகளில் ஒதுக்கப்படுகின்றனர். இவர்கள் முழுமையான ஆரோக்கியமடைய நாம் செயற்பட வேண்டும். இன்றைய இயேசுக்களாக சமூக ஆரோக்கியத்துக்காக செயற்படுவது மனுக்குலத்தின் முக்கியமான கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 3.10.2**

**பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக**

குழு 1 : யூத சமுதாயத்தில் தொழுநோய் காரணமாக ஒதுக்கப்பட்டவர்களின் நிலை.

குழு 2: ஒதுக்கப்பட்டோரை இயேசு முழுமனித வாழ்வுக்குள் அழைத்து வந்தார்.

குழு 3: எமது சமுதாயத்தில் வாழும் ஒதுக்கப்பட்டவர்கள்.

குழு 4: எமது சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் வாழ்வு பெற நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 4.0** : திருவிவிலியத்தின் அடிப்படையில் நாளாந்த வாழ்வை வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : செல்வி மேரி ஜோன்சின் விவிலியம் வாங்கும் ஆர்வத்தால் தூண்டப்பட்டவர்களாய் நல்வாழ்வு வாழ்வர்.

**செயற்பாடு 4.1** : செல்வி மேரி ஜோன்ஸ் போல ஒப்படைப்புடன் விவிலியத்தை வாசித்து நாளாந்த வாழ்வை வாழ்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 4.1.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 4.1.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- மேரி ஜோன்சின் படம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி முறை 4.1.1**

- இணைப்பு 4.1.1 தகவற் கோவையை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்
- மேரி ஜோன்சின் படத்தை பார்த்தபின் அவரைப்பற்றி மாணவர்கள் நினைப்பதை பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்
- பின்வருவனவற்றை விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

- செல்வி மேரி ஜோன்ஸ் விவிலியம் ஒன்றை சொந்தமாக வைத்துக் கொள்ள விரும்பிய ஒருவர்.
- ஏழைப் பெண் மேரி ஜோன்சின் அயரா முயற்சி சிறப்பானது.
- நாமும் விவிலியத்தை பெற்று ஆர்வமாக வாசித்து அதன்படி நாளாந்த வாழ்வை வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி முறை 4.1.2**

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 4.1.1 உள்ள செயற்பாட்டுப்படிவம், திருவிவிலியம், எழுது தாள், நிறப்பேனா மேரி ஜோன்சின் படம் என்பனவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

**படிமுறை 4.1.3**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை ஒப்படைக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- செல்வி மேரி ஜோன்ஸ் வேல்ஸ் நாட்டின் வடபகுதியில் (North of Wales) டின்டொல் (Tinddol) எனும் கிராமத்தில் 1784 இல் பிறந்தார்.
- திருமதி மொலி திரு ஜேக்ஸ் ஜோன்ஸ் என்போரின் மகளான மேரி ஜோன்ஸ் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்.
- மிகவும் கடினப்பட்டு முயற்சித்து பணம் சேமித்து விவிலியம் ஒன்றை வாங்கி மகிழ்ச்சியடைந்தார்.
- செல்வி மேரி ஜோன்ஸ்க்கு இருந்த அரப்பணிப்பு போல நாமும் அர்ப்பணிப்புடன் விவிலியம் கூறும் விழுமியங்களின் படி வாழ வேண்டும்.

**கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்**

- செல்வி மேரி ஜோன்சின் வாழ்க்கையில் திருவிலியம் வாங்க வேண்டுமெனும் எனும் ஆர்வம் தோன்ற காரணம் என்ன என கூறுவர்.
- திருவிவிலியத்தை வாங்க மேரி ஜோன்ஸ்க்கு குடும்பம் வழங்கிய ஒத்துழைப்பை விளக்குவர்.
- திருவிவிலியத்தை வாங்க மேரி ஜோன்ஸ்சுக்கு சமுதாயம் வழங்கிய ஒத்துழைப்பை மதித்து பாராட்டி விளக்குவர்.
- திருவிலியத்தில் பற்று கொண்டிருந்த செல்வி மேரி ஜோன்ஸ் போன்ற இளம் பெண்களை போல விவிலியத்துடன் வாழ்வோரை அடையாளம் கண்டு திரட்டி சேகரிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்பிக்க தயாராகுங்கள்

**தகவற் கோவை** **இணைப்பு 4.1.1**

செல்வி மேரி ஜோன்ஸ் வெல்ஸ் நாட்டின் வடபகுதியில் அமைந்திருந்த டின் டொல் எனும் கிராமத்தைச் சேர்ந்த ஒரு ஏழை இளம் பெண். இவர் 1784 பிறந்தார். இவரின் தந்தை ஜேக்கப் ஜோன்ஸ், தயார் மொலி என்போராவர்.

ஆலயத்தில் திருவிவிலியம் வாசிக்கப்படும் போது மட்டுமே விவிலியங்களை செவி சாய்க்க வாய்ப்பு கிட்டியது. வழிபாட்டில் கேட்டவற்றை மனனம் செய்து கொள்ள செல்வி மேரி ஜோன்ஸ் போன்றோர் முயற்சித்தனர். வாசிக்கும் திறன் மக்களிடம் இல்லாமையும் பெருஞ் சிக்கலாக இருந்தது.

அருட்பணி தோமஸ் சார்ள்ஸ் என்பவரின் முயற்சியால் திருவிவிலியத்தை வாசிக்கும் திறனை வளர்த்துக் கொண்டார். தொடங்கப்பட்ட துவக்கப் பாடசாலையில் படித்து வாசிக்கும் திறனை வளர்தார். செல்வி மேரி ஜோன்ஸ் மிகவும் கடினப்பட்டு உழைத்து பணம் சேகரித்தார். முட்டை, தேன், காலுறை, மரக்கறி, விற்பனை செய்தல் மூலமும், பண்ணை வேலை மூலமும் பணம் சேகரித்தார் .

திரு. வில்லியம் செல்வி மேரி ஜோன்சை அருட்பணி தோமஸ் சார்ள்ஸ் என்பவருக்கூடாக திருவிவிலியம் பெற உதவினார். தனியாக 25 மைல் மலைப்பாதையையூடாக நடந்து சென்ற செல்வி மேரி ஜோன்ஸ் திரு.டேவிற் எட்வேட்சின் உதவியோடு அருட்பணி தோமஸ் சார்ள்ஸ் அடிகளின் வீட்டிற்குச் சென்றார். திருவிவிலியம் விற்பனைக்கு இல்லை . இலண்டனிலிருந்து வந்திருந்தவை விற்கப்பட்டு விட்டன. ஒரேயொரு பிரதி மட்டும் குறிப்பிடப்பட்ட ஒருவருக்காக வைக்கப்பட்டடுள்ளது என்பதைக் கேட்டு மனமுடைந்து செல்வி மேரி ஜோன்ஸ் கவலைப்பட்டு கண்ணீர் விட்டார். அருட் பணி தோமஸ் சார்ள்சும் திரு டேவிட்டும் கண்ணீர் விட்டனர். பின்னர் அருட்பணி தோமஸ் சார்ள்ஸ், வேல்ஸ் மொழியிலான திருவிவிலியம் ஒன்றை செல்வி மேரி ஜோன்சுக்கு வழங்கினார். மனமகிழ்ச்சியுடன் வீடு திரும்பிய செல்வி மேரி ஜோன்ஸ் சமூகத்துடனும் குடும்பத்துடனும் இணைத்து பெரும் மகிழ்ச்சியடைந்தார். திருவிவலியத்தை நன்கு வாசித்து அதன்படி வாழ்ந்தார். மற்றவர்களுடனும் பகிரந்து கொண்டார்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 4.1.2**

செல்வி மேரி ஜோன்ஸ் திருவிவிலியத்தை வாங்கிய கதையை நாடகமாக குழுக்கள் மட்டத்தில் நடத்துவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 4.0** : திருவிவிலியத்தின் அடிப்படையில் நாளாந்த வாழ்வை வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : அருட்பணி தோமஸ் சார்ள்சின் திருவிவிலிய பகிர்வு பணியின் 'ஒப்படைப்பு' மூலம் தூண்டப்பட்டவர்களாக நல்லாழ்வு வாழ்வர்.

**செயற்பாடு 4.2** : அருட்பணி தோமஸ் சார்ள்ஸ் திருவிவிலியத்தை பகிர்ந்து கொண்டது போல நாமும் திருவிலியம் வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்த பாடுபடுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடு ள்**

- இணைப்பு 4.2.1 உள்ள தகவற் கோவை
- இணைப்பு 4.2.2 உள்ள செயற்பாட்டுப்படிவம்
- படிவம்
- தோமஸ் சார்ள்ஸ் படம்
- எழுது தாள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி முறை 4.2.1**
- இணைப்பு 4.21 இலுள்ள தகவற் கோவையை நன்கு வாசித்துக் விளங்கிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்
- அருட் பணி தோமஸ் சால்சின் படத்தை பார்த்த மற்றவர்கள் அவரைப்பற்றி நினைப்பதை பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்

- அருட் பணி தோமஸ் சாள்ஸ் வெல்சில் வாழ்ந்தார்.
- திருவிவிலியம் வெல்ஸ் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என பணி செய்தார்கள் என்பது.
- திருவிலியத்தை வாசிக்க ஏற்ற திறனைப் பெறச் செய்ய கல்வியூட்டும் முயற்சியில் ஈடுபட்டார் என்பது.
- நாமும் திருவிலிய சிந்தனைகளை பகிர்ந்து கொள்ளும் பணியில் அருட்பணி தோமஸ் சாள்ஸ்சின் அரப்பணிப்புடன் ஈடுபட வேண்டும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 4.2.2

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- குழுக்களுக்கு இணைப்பு 4.2.2 உள்ள செயற்பாட்டுப்படிவம் தோமஸ் சாள்சின் படம் எழுது தாள் நிறப்பேனா போன்றவற்றை வழங்குங்கள்
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

படிமுறை 4.2.3

- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்பிக்க இடமளியுங்கள்
- குறை நிரப்பு பணியில் ஈடுபட அதே குழுவுக்கு வாய்ப்பு வழங்குங்கள்
- பயனுள்ள விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- அருட்பணி தோமஸ் சார்ள்ஸ் விவிலியத்தை வேல்ஸ் மக்கள் படிக்க வேண்டுமென பணியாற்றினார்.
- அருட்பணி தோமஸ் சார்ள்ஸ் வாசிப்பத் திறன் பெற கல்விகூட வசதி ஏற்படுத்தினார் என்பது.
- அருட்பணி தோமஸ் சார்ள்சின் முயற்சியால் வேல்ஸ் மொழியிலான திருவிவிலியங்கள் அதிகமாகவும் மலிவாகவும் வழங்கப்பட்டன.
- இவரது பணி 1804 இல் வேல்ஸ் மொழியிலான திருவிவிலியங்களை அச்சிட்டு விற்பனை செய்யவும் வேதாகம கழகத்தை உருவாக்க வழிவகுத்தது.
- திருவிவிலிய பகிர்வில் அருட்பணி தோமஸ் சார்ள்ஸ் ஒப்படைப்புடன் ஈடுபட்டது போல நாமும் திருவிவிலியம் வழங்க முன்வர வேண்டும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- அருட்பணி தோமஸ் சார்ள்சின் பணியை விளக்குவர்.
- அருட்பணி தோமஸ் சாள்ஸ் திரு விவிலியத்தைப் பகிர மேற்கொண்ட நடவடிக்கைகளை தேடி சேகரிப்பர்.

1. திருவிவிலியத்தை வாசிக்கும் திறன் ஏற்படுத்தும் பாடசாலைகள்
2. மலிவு விலையில் அதிக விவிலியங்கள் கிடைக்க நடவடிக்கை எடுத்தமை

- திருவிலிய பகிர்வில் திருவிவிலியச் சங்கத்தவர்களின், இலங்கை திருவிலிய சங்கத்தின் பணி பற்றி அறிந்து எழுதுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் ஒப்படைக்க தயாராகுங்கள்

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 4.2.1**

அருட் பணி தோமஸ் சார்ள்ஸ் திருவிலியப்பகிர்வில் ஈடுபட்ட முக்கியமான ஒருவர். இவர் ஒரு நடமாடும் அருளுரையாளர்.

திருவிவிலியத்தை வேல்ஸ் மொழி மக்களுக்கு கிடைக்கச் செய்ய பணியாற்றினார். மொழியறிவைப் பெற்று திருவிவிலியத்தை வாசிப்பதற்காக கல்வியறிவூட்டும் கல்வி கூடத்திலிருந்து அதிக ஆர்வத்துடன் தொடங்கினார். செல்வி மேரி ஜோன்ஸ் போன்றவர்கள் இவருடைய தந்தை தாயும் கூட திருவிலியம் வாசிக்க வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டனர்.

ஏழைகள் திருவவிலியத்தை வாங்க முடியாத நிலை காணப்பட்டது. அதிகவிலையும் தட்டுப்பாடும் நிலவியது. திருவிவிலிய பிரதிகள் இலண்டனில் இருந்தே வெளிவந்தன. அருட்பணி தோமஸ் சார்ள்சின் முயற்சி மூலம் திருவிலியத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடும் வேல்ஸ் மக்களின் தேவையும் இலண்டனில் வைக்கப்பட்டது. 1804இல் வேல்ஸ் மொழியில் திருவிவிலிய வெளியீட்டுக் கழகமொன்றை ஏற்படுத்துவதாகக் கூறப்பட்டது. பின்னர் பிரித்தானிய- வெளிநாட்டு திருவிலிய சங்கங்கள் உருவாக்கப்பட்டன. 1806 ஜூலை மாதத்தில் 10,000 புதிய ஏற்பாடும், 1808இல் 201000 திருவிலியங்களும் 30,000 புதிய ஏற்பாடுகளும் வேல்ஸ் மொழியில் அச்சிடப்பட்டன. 1808 –1818 காலப்பகுதியில் 11000 திருவிவிலியங்கள் வருடாந்தம் வேவ்ஸ் மொழியில் பகிரப்பட்டன.

அருட்பணி தோமஸ் சார்ள்ஸ் திருவிவிலியப் பகிர்வுக்கு வேல்சில் ஆற்றிய பணிபோல பல நாடுகளிலும் பலர் செயற்பட்டுள்ளனர். நாம் இன்றைய பொது சூழ்நிலையில் விவிலியத்தின் நல்விழுமியங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**செயற்பாட்டுப்படிவம்** **இணைப்பு 4.2.2**

பின்வரும் தலைப்பில் குழுக்களிடையே விவாதிக்க.
இன்றைய தேவை
திருவிவிலியப் பகிர்வா?
திருவிவிலியம் கூறும் நல் விழுமியங்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 111

7.3.0 : கணிப்பீடும் மதிப்பீடும்

7.3.1 : கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம்

7.3.2 : கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.3.1. கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் மூலம் எதிர்பார்க்கப்படும். கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்ளவதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back) முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்குப் பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி, பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனரா என்பதை அறிவதன் மூலம் இனங்காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின்போது, மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களைப் பெற்றோர் உள்ளிட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன் வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையான (Student Centered) தேர்ச்சி மட்ட (Competency - Based) செயற்பாடு சார்ந்த (Activity - Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை, கணிப்பீடு - மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களைக் கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகக் கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றது. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் கண்டு கொள்வதற்கு, ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு, கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்ளுங்கள்.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாட விடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்யுங்கள். இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் சொற்பாட்டினை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ப்பத்திரிகை (Wall News papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப்புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- சமயோசிதப் பேச்சு (Impromtu Speech)
- நடிபங்கு (Role plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literatue Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப் புத்தகம் (Field Boks/ Nature Diaries)
- செய்முறை சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேசக் கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தற் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால், கற்றல் - கற்பித்தல் செய்கை, மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு, மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7.3.2 கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

**01. பாடசாலைத் தவணை** :- மூன்றாந்தவணை 03

**02. உள்ளடக்கப்பட வேண்டிய தேர்ச்சி மட்டம்** :- 3.9, 3.10

**03. விடய உள்ளடக்கம்** :- பாவிகள் எனக் கருதப்பட்டோருக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்வோம். எல்லோரையும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக வாழ்வோம்.

**04. கருவியின் தன்மை** :- சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் பற்றிய பட்டியலொன்றை எமது சமூகத்திருந்து தயாரித்தல்.

**05. கருவியின் நோக்கம** :-

- அவர்களுக்காக எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தேடிப்பார்ப்பார்.
- அவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் (ஆசிரியருக்கானது)**

- ஆசிரியர் 3.9, 3.10 செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன் இக்கருவியை வகுப்பில் அறிமுகப் படுத்தவும்.
- தனித் தனியே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளின் கீழ் சில குழுக்கள், இறுதியான செயற்பாட்டென்பதை மாணவர்களுக்கு அறிவிக்கவும்
- செய்தித் தாள்களில் சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ள ஆலோசனை வழங்கவும்
- குறிப்புகளை அடிக்கடி மேற்பார்வை செய்து அறிக்கைப்படுத்தவும்.
- அவர்களுடைய சுதந்திரமான கருத்துக்களின் அடிப்படையில் சிறிய கையேடு ஒன்றைத் தயாரிப்பதல் ஈடுபடுத்தவும்.
- இறுதியாக ஒப்படைக்க வேண்டிய திகதியை அறிவிக்கவும்.

**7. மாணவர்களுக்கான ஆலோசனைகள் :-**

- ஆசிரிய / ஆசிரியைகளால் தரப்படும் ஆலோசனைகளை கவனமாகச் செவி மடுக்கவும்.
- தேவையான தகவல்களை செய்தித் தாள்களிலிருந்து தேடிச் சேகரிக்கவும்.
- தலைப்புகளை குழுக்களுக்கி டையில் பகிர்ந்து கொள்ளவும்.
- குழுக்கிகளின் கருத்துக்களின் அடிப்படையில் சிறிய கையோடு ஒன்றைத் தயாரிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. கணிப்பீட்டு முறை

| | நியதிகள் / பெயர் | நோக்கங்களை விபரமாக விளங்கிக் கொள்ளல் | செயற்பாட்டில் ஈடுபடுத்தும் பொறுப்புக்களை ஏற்றல் | வளங்களைப் பயன் படுத்தலும் விடயங் களைக்/ கோவைப் படுத்தலும் | கொடுக்கப்பட்ட நேரத்துக்குள் முடித்தல் | மனதை ஈர்க்கும் தன்மை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |

புள்ளிவழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| மிக நன்று | - | 04 |
| நன்று | - | 03 |
| சாதாரணம் | - | 02 |
| தேர்ச்சி பெற வேண்டும் | - | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.3.2 கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

**01. பாடசாலைத் தவணை** :- முதலாம் தவணை 01

**02. உள்ளடக்கப்பட வேண்டிய தேர்ச்சி மட்டம்** :- 1.2, 1.3, 1.4, 1.5

**03. விடய உள்ளடக்கம்** :-
- விலங்குகள்
- ஒளிர்வன
- கடல் நீர்வளங்கள்
- கடவுள் நம்மோடு

**04. கருவியின் தன்மை** :- கடவுளின் படைப்புகளான விலங்குகள், ஒளிர்வன, கடல்நீர் வளங்கள், கடவுள் நம்மோடு என்பவற்றின் ஆச்சரியமான தன்மையை எடுத்துக் காட்டும் மாணவருடைய கண்காட்சி

**05. கருவியின் நோக்கம்** :-
- கடவுளின் படைப்பின் அழகும் தேவையான சித்திரங்கள், ஆக்கங்களின் வழியாக எடுத்துக் காட்டுவர்.
- இதன் வழியாக மனித வாழ்வுக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய இறைப்பண்புகளுக்கு வழிகாட்டுதல்

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் (ஆசிரியருக்கானது)**

- ஆசிரியர் செயற்பாட்டு வேளைகளை ஆரம்பிப்பதற்கு முன் இக்கருவிகளை வகுப்பில் அறிமுகப்படுத்தவும்.
- இவற்றைத் தனித்தனியே சித்திரங்காளக வரைவதோடு, கண்காட்சியோடு முடிவடையும் என்பதை மாணவருக்கு அறிவிக்கவும்
- சித்திரங்களை வரைவதற்கு முன் சூழழை அவதானிக்கும்படி மாணவர்களுக்கு அறிவிக்கவும்.
- குறிக்கப்பட்ட நேரத்துக்குள் சித்திரங்களை வரைவதற்கும் ஆக்கங்களுக்கும் மாணவரை ஈடுபடுத்துவும்.
- சித்திரங்களை கண்காட்சிப் படுத்தும் திகதியை மாணவர்களுக்கு அறிவிக்கவும்.

**7. மாணவர்களுக்கான ஆலோசனைகள்** :-
- ஆசிரிய / ஆசிரியைகளால் தரப்படும் ஆலோசனைகளை கவனமாகச் செவி மடுக்கவும்.
- பாடசாலைச் சூழலை அவதானிக்கும் பயணத்தில் ஈடுபடவும்.
- சூழல் பல்வேறுபட்டது, அழகானது, விலங்குகள், ஆச்சரியத்தன்மை என்பவற்றை எடுத்துக் காட்டக் கூடிய சித்திரங்கள், ஆக்கங்களை முன்வைக்கவும்.
- இதற்காக பஸ்டல், நீர்ச்சாயம் சூழலிலுள்ள இலைகள், பூக்கள், மரப்பட்டை என்பவற்றையும் உபயோகிக்கலாம்.
- கண்காட்சிக்கான இறுதி வெளியீட்டை முன்வைக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. கணிப்பீட்டு முறை

| | நியதிகள் / பெயர் | நோக்கங்களை விபரமாக விளங்கிக் கொள்ளல் | ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளல் | தலைமைத்துவப் பண்புகள் | காலத்துக்கு ஏற்ற சித்திரம் குறிப்பிட்ட நேரத்தில் முடித்தல் | மனதை கவரும் தன்மை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |

புள்ளிவழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| மிக நன்று | - | 04 |
| நன்று | - | 03 |
| சாதாரணம் | - | 02 |
| தேர்ச்சி பெற வேண்டும் | - | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7.3.2 கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

**01. பாடசாலைத் தவணை** :- இரண்டாம் தவணை 02

**02. உள்ளடக்கும் தேர்ச்சி மட்டம்** :- 2.2

**03. விடய உள்ளடக்கம்** :-

- எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டுவந்த விடுதலைபயணத்தில் கிடைக்கப் பெற்ற இறை பராமரிப்பு

**04. கருவியின் தன்மை** :- இந்த விடுதலைப் பயணத்தில் நிகழ்ந்த சம்பவங்களை உள்ளடக்கிய நாடகமொன்றை 20 நிமிடங்களுக்கு உருவாக்குதல்.

**05. கருவியின் நோக்கம்** :- எகிப்திலிருந்து மீட்டுக் கொண்டுவந்த விடுதலைப் பயணத்தில் இறைப்பராமரிப்பு நிகழ்ந்ததை விளங்கிக் கொள்வர்.

- இதன் வழியாக இறை பராமரிப்பை இனங்காண்பர்.

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் (ஆசிரியருக்கானது)**

- ஆசிரியர் இரு செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன் கருவிகளை வகுப்பில் அறிமுகப்படுத்தவும்.
- இந்நாடகத்தை வகுப்பில் முன்வைத்தபின் முடிவடையும் என்பதை மாணவர்களுக்கு அறிவிக்கவும்.
- திருவிவிலியத்தை வாசித்து விடயங்களை சேகரித்து அந்தவிடயங்களை சுருக்கமாக எழுதுவதற்கு மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- நாடகத்தின் பிரதியொன்றில் சரியான விடயங்களைக் கோவைப்படுத்துவதற்கு ஒழுங்கு செய்யவும்
- நாடகம் நடை பெறும் தினத்தை மாணவர்களுக்கு அறிவிக்கவும்.

**7. மாணவர்களுக்கான ஆலோசனைகள் :-**

- ஆசிரிய / ஆசிரியைகளால் தரப்படும் ஆலோசனைகளை கவனமாகச் செவி மடுக்கவும்.
- திருவிவிலியத்தை வாசித்து விடயங்களை சுருக்கிக் கொள்ளவும்.
- குழுக்களுக்கிடையில் விடயங்களைப் பகிர்ந்து கொள்ளவும்.
- அதன் வழியாக நாடகப் பிரதி யொன்றைத் தயாரிக்கவும்.
- வளங்களை உபயோகித்து நாடகத்தை முன் வைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. கணிப்பீட்டு முறை

| நியதிகள் / பெயர் | | நோக்கங்களை விபரமாக விளங்கிக் கொள்ளல் | அறிவுரைகளைக் கடைப் பிடித்தல் | தலைமைத்துவப் பண்புகள் | நாடகத்தில் உள்ளடக்கப் படவேண்டிய விடயங்களின் பல்வேறு தன்மைகள் | மனதை கவரும் தன்மை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |

புள்ளிவழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| மிக நன்று | - | 04 |
| நன்று | - | 03 |
| சாதாரணம் | - | 02 |
| தேர்ச்சி பெற வேண்டும் | - | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය
ක්‍රිස්තු ධර්මය 7 (දෙ)

ISBN 978-955-654-150-2

2010/T/07/TIM/2,250

[redacted]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org